# The Bible Standard

(Extra - Edition)



உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும். சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from the Booklet**

**பொருளடக்கம்**

# யூதர்களின் நம்பிக்கைகளும் எதிர்காலப் பலன்களும்

**JEWISH HOPES AND PROSPECTS**

**BS Tamil Version - 11**

# ‘‘ என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள் ’’

*“Comfort ye my People”*

**‘‘என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள். எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி அதின் போர் முடிந்தது என்றும் அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும் அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்.’’ (ஏசா. 40 : 1, 2)**

இந்த வசனத்திலுள்ள வார்த்தைகள் பல நூற்றாண்டு களாக வேதனையுடன் பாடனுபவித்து நாடற்ற ஜாதியாக, மிக ஆச்சரியமான வாக்குத்தத்தங்களைப் பெற்றும் அவற்றை இன்னும் அனுபவிக்காத ஜனங்களாக, எல்லா ஜனங்களுக் குள்ளும் சிதறடிக்கப்பட்ட ஜனமாக, என்றாலும் அவர்களுடைய ஸ்தாபிதத்தின் ஆரம்பத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்துக்கு இசைவாக (லேவி. 26 : 44) மற்றெல்லா ஜாதிகளிலுமிருந்து வேறுபட்ட தனி ஜாதியாக பாதுகாக்கப்பட்டு வருகிற யாக்கோபின் சந்ததிக்கேயன்றி ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கோ பரம எருசலேமுக்கோ பொருந்தாது என்பதில் சந்தேகமில்லை. யூதர்கள் தங்களிலேயே ஒரு அற்புதமாயிருக்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங் களையும் அவற்றின் வல்லமை மனிதரின் மனதில் இருப்பதையும் பற்றி அவர்கள் நாகரீக உலகத்துக்கு சாட்சி பகருகிறார்கள். வேதாகமத்தில் முன்னறிவித்திருக்கிறபடி அவர்கள் பல நூற்றாண்டுகளாக தீர்க்கதரிசி இல்லாமலும் ஆசாரியன் இல்லாமலும், ஏபோத் இல்லாமலும், தேவதரிசனம் இல்லாமலும், வெளிப்படுத்தல் இல்லாமலும் இருந்திருக் கிறார்கள். (ஓசியா 3 : 4) ஒரு காலத்தில் தேவ நோக்கங்கள் வெளிப்படுத்தப்படும் மகிமையையுடைய ஒரே ஜனமாக இருந்தவர்கள் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு அதிகமான காலத்தில் அவர்கள் ஒரு ஜாதியாகப் பாதுகாக்கப்பட்டது தவிர வேறு எந்த தேவதயவும் அற்ற அநாதைகளாக இருந்தார்கள்.

நாம் இஸ்ரவேலரைத் தூஷிக்கிறவர்களைச் சேர்ந்தவர் களல்ல. இஸ்ரவேலரைத் தூஷிக்கிறவர்கள், ‘‘கிறிஸ்துவை கொன்றவர்களே, தேவகோபம் உங்கள் மேலிருக்கிறது. நீங்கள் அடைந்த துன்பம் நித்திய காலமாக நீங்கள் அனுபவிக்கப் போகும் கொடிய துன்பங்களின் முன்அனுபவமாக மாத்திரமிருக்கிறது’’, என்று கத்துகிறார்கள். கர்த்தருக்குத் தோத்திரம். அப்படியல்ல, எங்கள் மனதில் அப்படிப்பட்ட கெட்ட எண்ணம் இல்லை. ஆதாமின் மற்றப் பிள்ளைகளிடத்தில் இருப்பது போல் யூதனிடத்திலும் குறை கூறக் கூடிய பல விஷயங்களிலிருந்தாலும் நாம் அவனிடம் அனுதாபம் கொள்வதை விட வேறு ஒன்றும் செய்வதில்லை. என்றாலும் மெச்சத் தகுந்த குணங்களையும் அவனிடம் காண்கிறோம். மற்ற விஷயங்களுக்கிடையில் ஆபிரகாமிடம் இருப்பதாக தேவன் மிகவும் பாராட்டின குணமாகிய ‘‘தேவனிடத்திலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலுமுள்ள விசுவாசத்தைக்’’ காண்கிறோம். அப்படிப்பட்ட விசுவாசம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களைப் பல நூற்றாண்டுகளாக எல்லா விதமான பிரதிகூலமான அனுபவங்களின் ஊடாய் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் ராஜ்யம் வரக் காத்திருக்கும்படி தூண்டியிருக்கிறது.

## இஸ்ரவேலர் ஆசீர்வாதத்தின் வழியாக இருக்கிறார்கள்

மனுக்குலத்துக்கு மேசியாவின் ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறவர்களாக இஸ்ரவேலர் உயர்த்தப்படுவார்கள் என்று வெகுகாலத்துக்கு முன் வாக்களிக்கப்பட்ட காலம் சமீபித்திருக் கிறது. அது தீவிரமாய் நெருங்கி வருகிறது. புது ஒழுங்கு ஆரம்பமாவதையொட்டி இன்னொரு மகா உபத்திரவம் நேர்ந்தால் என்ன! பெரு மூச்சுக்கும் அழுகைக்கும் அப்பால் பாவமும் அதன் தண்டனையும் மனுக்குலத்தின் மேல் கொண்டு வந்த மரண நிழலையும் நம்பிக்கையின்மையையும், நீதியின் சூரியன் உலகத்திலிருந்து அகற்றும் மகிமையான நாளின் அதிகாலை உதயமாகிறது. (சங். 30 : 5; மல். 4 : 2; ஏசா. 35 : 10) இப்போது நம்மேலிருக்கும் மகா உபத்திரவ காலத்தின் சம்பந்தமாக இஸ்ரவேலர் இன்னமும் ‘‘யாக்கோபின் இக்கட்டுக் காலத்தை’’ அனுபவிக்க வேண்டியதிருக்கிறது என்று வேதவசனங்கள் நமக்கு கூறினால் என்ன? (எரே. 30 : 7) தாம் சிருஷ்டிக்கப்போவதாக தேவன் கூறும் புதியவானத்திலும் புதிய பூமியிலும் நாம் களி கூராதபடி இவைகளில் ஒன்றும் நம்மைத் தடுக்காது. ‘‘**நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்**’’. (ஏசா. 65 : 17, 18; 66 : 22) புதிய வானம், புதிய பூமி என்பது புதிய சமூக ஒழுங்கும் வானங்களில் நித்தியமாக இருக்கும் புதிய சபை ஒழுங்கும் இருக்கும் புது சகாப்தத்தைக் குறித்து காட்டும் அடையாளமான வார்த்தைகளாகும். இது நிறைவேறிக் கொண்டிருக்கும் காலம் வந்துவிட்டது. தீர்க்கத்தரிசனப் பகுதியில் பிரகாசிக்கும் சத்தியமாகிய விளக்கு, உரிமைக்காரர் எப்பொழுது தமது மகா அதிகாரத்தைப் பெற்று அரசாளுவார் என்பதை உலகத்தின் மாபெரும் கடிகாரம் குறிப்பிடுவதை நமக்குக் காட்டுகிறது. (எசே. 21 : 27). ஆம்! அப்பொழுது ஜாதிகள் கோபம் கொள்வார்கள் என்றும் தேவ கோபம் வெளிப்படுமென்றும் (சங். 110 : 5, 6; மல். 4 : 1) அதன்பிறகு மரித்தோரின் நியாயத்தீர்ப்பும், பெரியோருக்கும் சிறியோருக்கும் பலன ளிக்கும் காலமும் வருமென்றும் எழுதியிருப்பதை நினைவு கூறுகிறோம். (தானி. 7 : 9, 10) புற ஜாதியார் காலம் முடிந்து மேசியாவின் ஆட்சி சமீபித்திருக்கிறதென்று நாம் உண்மையாக

**Published by : THE ISRAEL COMMISSION. COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் எல்லா அநீதியையும் கீழ்ப்படியாமையையும் அடக்கி பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக நாவுகள் யாவும் அவரை அறிக்கை பண்ணும் வரைக்கும், முழங்கால்களெல்லாம் அவருக்கு முன் முடங்கும் வரைக்கும் அவர் ஆட்சி செய்ய வேண்டும். (ஏசா. 45 : 22-25).

ராஜ்யத்தின் வேலை ஒழுங்கில், முதலாவதானது சாத்தானைக் கட்டுவதாகும். இது பூலோக அரசனுக்குரிய தாயிராமல் பரலோக அரசனுக்குரியதாயிருக்கிறது. மனுக் குலத்தை நியாயம் தீர்த்து, தீர்ப்புக்கூறி வெகுமதியளித்து, தண்டனை விதித்து பாவத்தையும் மரணத்தையும் ஒழிப்பதில் மகிமையின் ராஜா படிப்படியாக தமது கிருபை நிறைந்த குணத்தையும் பிதாவின் நீதியையும் மனுமக்களுக்கு வெளிப் படச் செய்வார். யாவருக்கும் பிதாவானவரை அவருடைய உண்மையான குணத்தில் பார்ப்பதற்கு மாத்திரமல்ல, சங். 22-லும் ஏசா. 53-லும் தீர்க்கத் தரிசனமாகச் சொல்லப்பட்டபடி நமக்காக உண்மையுடன் பாடனுபவித்தவரும், தேவ ஆசீர்வாதத்தை இஸ்ரவேலர் மேலும், அவர்கள் மூலம் அந்த ஆசீர்வாதத்தை எல்லா ஜாதிகளுக்கும் ஊற்றும் பொறுப்பை ஒப்படைக்கப்பெற்றவராகவும், இப்போது தெய்வீகமகத்துவத்தின் வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டவராகவும் இருக்கிற குமாரனையும், (ஏசா. 52 : 13-15) மகிமைப் படுத்தப்பட்ட வராகவும் வெற்றிவீரராகவும், மேசியாவாகவும் பார்க்கும்படி படிப்படியாக அவர்களின் மனக்கண்கள் திறக்கப்படும்.

ஒரு காலத்தில் இகழப்பட்டவரும் இப்போது உயர்த்தப்பட்டவருமாயிருக்கிற மேசியாவால் உலகத்தின் இருள் நீங்குவதையும், இஸ்ரவேலர் மேலும் மற்றெல்லா ஜாதிகள் மேலும் வரும் ஆசீர்வாதத்தையும் நூற்றுக்கணக்கான வருஷங் களாக பக்தியுள்ள யூதர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது பஸ்காவின் முதல்நாள் ஜெபத்தில் ஏசா. 53-ல் வருகிற மேசியாவைக் குறித்துக் காட்டுகிற கீழ்க்கண்ட பகுதியால் தெரியவருகிறது.

### அவர்கள் ஜெபத்தின் மொழிபெயர்ப்பு

எனது நேசரே காட்சியின் முடிவுவரை பறந்து வாரும், பேசும். இருள் நீங்கும்படி தீவிரமாய்வாரும். இப்போது இகழப்படும் அவர் உயர்த்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டு உயர்ந்திருப்பாராக அவர் விவேகத்துடன் நடவடிக்கை செய்து கண்டித்து அநேக ஜாதிகளில் தெளிப்பாராக.

## ஒரு ராஜா, ஆனால் இரண்டு ராஜ்யங்கள்

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தம் இரண்டு வித்துக்களின் மூலம் நிறைவேற வேண்டுமென்று கவனமுள்ள வேத மாணாக்கர் அறிந் திருக்கிறார்கள். யாவருக்கும் மேலான மேசியாவைத் தலையாகக் கொண்ட பரலோக வகுப்பு ஒன்று, மற்றது பூலோக வகுப்பு, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு அதிகமான காலமாக ஆபிரகாமின் வித்தாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் தயவு காட்டியிருக்கிறார். நீதியின்படி அவர்கள் தண்டிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டனர். என்றாலும் அக்காலத்தில் எல்லாம் அவர்களின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கத்தரிசனங்களிலும், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் அவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களிலும் தேவதயவும் அவர்களுக்கு கிடைத்து வந்தது. நாம் விளக்கிக் காட்டுகிறபடி அந்தத் தயவின் காலம் கிறிஸ்துவின் மரணத்தோடு முடிவடைந்தது. அதிலிருந்து சிறிது காலத்தில் கி.பி. 69-ல் அவர்கள் நாடு ரோம படையால் பாழாக்கப்பட்டது. நமது பாடத்தில் சொல்லப்பட்டபடி அதற்கு இணையான காலம் வந்திருக்கிறது. ஆதலின் இது தேவதயவு திரும்பக் கிடைக்கும் காலமாயிருக்கிறது. அது ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது.

கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளில் யூதர் இப்போது இருப்பதைப் போல் வசதியுடன் ஸ்திரமான நிலையில் இருந்ததில்லை. இருந்தாலும் அவர்களின் நற்காலம் இப்போதுதான் ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது. தேவன் குறித்த காலத்தில் சீக்கிரமாக நியாயப்பிரமாணத்திலும் தீர்க்க தரிசனத்திலும் சொல்லப்பட்ட அருமையான வாக்குத்தத்தங் களாகிய தேவ தயவு அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களிடத்தில் நிறைவேறும். ஏற்கனவே யூதர் இந்தப் பெரிய சத்தியத்தை உணர்ந்து கொள்ளும்படி விழிப்படைந்து வருகிறார்கள்.

அரசியல் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட சீயோனிசம் என்ற இயக்கம் மதசம்பந்தமான இயக்கமாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருக்கிறது. தெய்வாதீன ஆசீர்வாதம் அவர்கள் காரியத்தை அவ்வாறு ஒழுங்குபடுத்துகிறது. இவ்வளவு காலமாக அறியாமலும் குருட்டுத் தனமாகவும் வாசிக்கப்பட்டு வந்த புஸ்தகத்திலுள்ள வார்த்தைகள், தேவ வாக்குத்தத்தங்களின் வார்த்தைகள் பிரகாசமடைந்து வெளிச்சத்தைக் கொடுக்கிறதா யிருக்கிறது . அந்த வெளிச்சம் கர்த்தருடைய வழிகளில் அவர்களைத் திருப்பி அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவர்களைத் திரும்பக் குடியேற்றி அவர்கள் உயர்ந்த நிலையை அடைய வழிநடத்தும்.

## யூதர் யூதராகவே இருத்தல்

வனாந்தரத்திலிருந்து ஒரு சத்தம் தொனிக்கிறது. எங்குமுள்ள யூதர்கள் அதைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களை கிறிஸ்தவர்களாகும்படி அழைக்கவில்லை. யூதராகவே இருந்து யூதராக நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் கர்த்தரால் அவர் களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் உயர்ந்த இலட்சியங்களைத் தெளிவாக அறிந்து உணரும்படி அழைக்கிறது. அதன்படி சரியாக நடக்கிறவர்களுக்கு பெரிய ஆசிர்வாதம் சமீபமாக இருக்கிறது . அது அவர்கள் கடந்த காலங்களில் அடைந்த துன்பங்களோடு ஒப்பிடுவதற்கு மேலானதாக இருக்கும். இஸ்ரவேலரின் மகா வெற்றி வாளினாலோ, துப்பாக்கி களினாலோ சக்தி வாய்ந்த யுத்தக் கப்பல்களினாலோ, விமானங்களினாலோ, கடற்கண்ணிகளினாலோ, அணு குண்டுகளினாலோ கிடைப்பதல்ல. பணசக்தியினாலோ பொற் கன்றுக்குட்டியாகிய பணத்தை வணங்குவதினாலோ, மாம்ச பெலத்தை நம்புவதினாலோ வராமல் தேவனிடமிருந்து வரும் உதவியை எதிர்பார்த்திருப்பதினால் அது கிடைக்கும். (சங். 121 : 1, 2).

சீக்கிரத்தில் ஸ்தாபிதமாக இருக்கும் மேசியாவின் ஆவிக்குரிய ராஜ்யம் சாத்தானைக் கட்டி எல்லா தீமையையும்

பரிகரித்து, சாலொமோனைவிட அதிகாரமுள்ளவரும், தாவீதை விட அதிகமாக தேவனால் நேசிக்கப்பட்டவருமான மகா ராஜாவின் கீழ், பெரியவனான மோசேயைவிட (உபா. 18 : 15, 18, 19) திறமையுள்ள மேலான மத்தியஸ்தரின் கீழ், பழமையான நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குப் பதில் (எரே. 31 : 31-34; 32 : 36-40) இஸ்ரவேலருடன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி அவர்களை ஆசீர்வதித்து, ஜனங்களுக்காக கொடியை உயர்த்தும் (ஏசா. 49 : 22; 62 : 10) பரத்துக்குரிய மகத்தான இந்த ராஜ்யம் உபத்திரவ காலத்தில் உலகத்தின் துன்ப நேரத்தில் மிகுந்த அதிகாரத்தோடு உலகத்தில் ஸ்தாபிதம் செய்யப்படும் (தானி. 12 : 1; எரே. 25 : 29- 33: செப். 3 : 8, 9) தற்காலத்தில் உலகத்தை அடக்கி ஆளுவதும், தற்கால சிறப்பான நாகரீகத்தை, மேற்பார்வையாகவாவது சிறப்பாகத் தோன்றுவதை அழிக்க கர்த்தரால் உபயோகிக்கப்படுவதுமான, சுயநலத்தின் காரண மாக இந்தக் கொடிய உபத்திரவத்தை கொண்டுவருவதில் யூதரும் புறஜாதியாரும், ஐசுவரியவான்களும் ஏழைகளும் பொறுப்புள்ளவர்களாவார்கள்.

பொதுநலவாதிகளின் வார்த்தைகளாகிய பீரங்கியும், அதே தன்மையுடைய மத அதிகாரிகளின் குண்டுகளும், சச்சரவை அதிகப்படுத்துகிறவையாக மாத்திரமிருக்கின்றன. இந்த மகா உபத்திரவ காலத்தில் நாகரீக சுமைகளும், நெம்புகோல்களும் அதிகம் செய்திருக்கின்றன. இன்னும் அதிகம் செய்ய வேண்டியதிருக்கிறது. இந்த உபத்திரவ காலத்தில் பாவம், அக்கிரமம் அநீதி, சுயநலம் ஆகியவற்றின் ஆதிக்கம் இனி ஒருக்காலும் தலைதூக்காதபடி நித்தியமாக அழிவடையும். தற்கால மத ஒழுங்குகளும் குறைவாகக் காணப்பட்டு அகன்று போகும். ஏனெனில் தற்காலத்தில் அடையாளமாக வானங்களும் பூமியும் என்று அழைக்கப் படுகிற இந்தப் பழைய ஒழுங்குகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதில் புதிய வானமும் புதிய பூமியும் ஸ்தாபிக்கப்படும். (ஏசா. 65 : 17; 66 : 22) மகிமை பொருந்திய மேசியாவும் பூமியில் திரும்ப அமைக்கப்படும் சமூகமும் சேர்ந்து நீதிவாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியுமாகும். இந்த நிலை மாற்றம் மேசியாவின் நீதியான மேற்பார்வையின் கீழ்வரும் மகிமையான நித்திய ஆசீர்வாதத்தோடு ஒப்பிடும் போது கணப்பொழுது மாத்திரம் மிகுந்த கடும் சோதனையாக இருக்கும். ''**அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்**'' (சங். 46 : 9).

## இஸ்ரவேலரின் நம்பிக்கை ஏன் இவ்வளவு காலம் தாமதித்தது?

இந்த காரியங்கள் அப்படியிருக்குமானால், மேசியா வின் ராஜ்யம், யூதர்கள் நினைக்கிறபடி, இனி ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருந்தால் பூமிக்குரிய ராஜ்யத்துக்குப் பதில் ஆவிக்குரிய ராஜ்யம் ஸ்தாபிதமாகி இருக்கிறதென்பதே கிறிஸ்தவர்களைப் போல் யூத நண்பர்களின் குழப்பமடைந்த எண்ணமும் இருக்கிறது. பிற்காலத்தில் தமது ஆசீர்வாதத்தை அளிக்க முற்காலத்தில் தயவு பெற்ற மனிதரை உபயோகிப்பது தேவனின் நோக்கமாயிருந்தால் அது வெகுகாலமாகத் தாமதிப்பது ஏன்? இதைத் தான் ''இரகசியம்'' என்று வேத வசனங்கள் கூறுகின்றன என்று பதிலளிக்கிறோம். இது ஆபிரகாமுக்காவது தீர்க்கதரிசிகளில் யார்மூலமாவது தேவன் நேரடியாக வெளிப்படுத்தாத காரியமாகும். ''**உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பெருகப் பண்ணுவேன்**''. என்று ஆபிரகாமுக்குச் சொல்லி மறைமுகமாக அவர் அதைக் குறிப்பிட்டிருக்கிறார். (ஆதி. 22 : 16-18) இந்த இரு உதாரணங்களும் அதே ஜனத்துக்கு உரியதாயிருக்கிறதென்பதை ஆபிரகாமாவது மற்றவர்களாவது அறிந்து கொள்ளவில்லை. பூமிக்குரிய வாக்குத்தத்தங்கள் இயற்கையான இஸ்ரவேலருக்கு உரிய தாகும். முடிவில் மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் ஆசீர்வதிக்கப் படும் மனுக்குலம் முழுவதும் விசாலமான கருத்தில் ஆபிரகாமின் சந்ததியாக இஸ்ரவேல் ஆவார்கள். (கலா. 3 : 7).

இவ்வாறு ஆபிரகாமின் சந்ததி பெருங்கூட்டமாக கடற்கரை மணலைப் போலிருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியின் அங்கங்களாகப் பூரணமாகுமுன் ஆபிரகாமைப் போல் விசுவாசமும் கீழ்ப்படிதலும் உள்ளவர் களாய் இருக்கவேண்டும். ஆசீர்வாதத்தின் ஒழுங்கில் முதலில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் முற்கால பரிசுத்தவான்களாகிய மூப்பரான விசுவாசிகள் வருவார்கள். இவர்கள் பூரணரான விழுந்து போன மனிதராக அல்ல பூரணராக தேவனின் வல்லமையால் உயிருடன் எழுப்பப் படுவார்கள். முற்காலத்தில் அவர்களுக்கிருந்த மகிமையான கொள்கைக்குத் தக்கபடி உயிருடன் எழுப்பப்படுவார்கள். கண்டு அல்ல, காணாமல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்ததால், இது அவர்களுக்குக் கிடைக்கும் ஆயிர வருஷயுக வெகுமதியாகும். பிதாக்களாயிருப்பதற்குப் பதில் அவர்கள் குமாரராய் இருப்பார்கள். அவர்களை மேசியா அதிகாரத்திலிருக்கிற தமது பிரதிநிதிகளாக ஆட்சியிலும் அதிகாரத்திலும் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார் என்று நாம் வாசிக்கிறோம். (சங். 45 : 16) அந்நேரத்தில் வெகுகாலமாக இஸ்ரவேலரிட மிருந்து நீக்கப்பட்டிருந்த ஆசீர்வாதம் திரும்பவும் அவர்களுக்குக் கிடைக்கும்.

## இயேசுவின் பெயரால் செய்த குற்றங்கள்

இருண்ட காலங்களில் கிறிஸ்துவின் பெயரால் கொடிய குற்றங்கள் நடைபெற்றது என்பதை கிறிஸ்தவர்கள் வெட்கத்துடன் ஒப்புக் கொள்ளவேண்டும். இயேசுவின் நாமத்தில் பயங்கரமான முறையில் யாவற்றையும் தவறாகக் காட்டுவது இன்றும் நடைபெறுவது அதிலும் கேவலமானதாகும். கடந்த வருஷங்களில் ரஷ்யாவிலும் அதற்குமுன் மற்ற பல நாடுகளிலும் கிறிஸ்து மதத்தின் பெயரால் யூதர்களுக்கு அநீதி செய்யப்பட்டது மாத்திரமல்ல நமது தலைமுறையிலும் ஜெர்மனி, போலந்து, ருமேனியா முதலிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் யூதர்கள் விஷயத்தில் அசல் பேய்கள் போல் நடந்திருக்கிறார்கள். யூத கல்லறைகள் கொள்ளையிடப்பட்டன என்று ஊர்ஜிதம் செய்யப் பட்ட விவரங்கள் கூறுகின்றன. இரண்டு மாதங்களுக்குள் புதைக்கப்பட்டவர்களில் பலர் தோண்டி எடுக்கப்பட்டு அழுகிய அவர்கள் உடல் சின்னாபின்ன மாக்கப்பட்டு அவர்கள் குடும்பத்தாரின் வீட்டுப் படிகளிலும் முற்றங்களிலும் எறியப்பட்டன. முதல் உலக யுத்தத்தில் ரஷ்யப் படைகள் யுத்தம் செய்தபோது குண்டுகளுக்கு இரையாகும்படி யூத

பெண்களையும் குழந்தைகளையும் தங்களுக்கு முன் விரட்டினர். கிறிஸ்தவ நாடுகள் எனப்பட்ட ரஷ்யா, போலந்து மற்றும் பல நாடுகளில் யூதர்கள் சுட்டெரிக்கப்பட்டனர். கடந்த யுத்தத்தில் ஹிட்லர் போப்புவின் ஆசீர்வாதத்தைப் பெற்று லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று அவர்கள் உடல்களை உரமாக்கினான். கிறிஸ்தவன் என்ற சொல்லுக்காகவும் இயேசு என்ற பெயருக்காகவும் பல காரியங்களில் யூதர் பகையை வளர்த்தார்கள் என்று நாம் சொல்லக்கூடுமா?

சரியாக அறியப்பட்டபடி இயேசு என்ற பெயர் யோசுவா அல்லது ஜெகோசுவா (எண். 13 : 16) என்ற பெயரின் மற்றொரு படிவமாகும். அது யெகோவாவின் விடுதலையாளர் என்பதைக் குறித்துக் காட்டுகிறது. கிறிஸ்து என்ற பெயர் மேசியா என்ற பெயருக்குச் சரியான கிரேக்க வார்த்தை யிலிருந்து வந்ததாகும். இயேசுவானவரின் குணத்தையும் போதகங்களையும் பற்றி சரியாக அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு யூதனும் அவரையும், எந்த காலத்திலுமிருந்த சிறந்த யூதர்களின் மத்தியிலிருக்கிறவர்களான அவரைப் பின்பற்று கிறவர்களையும் கனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். கிறிஸ்தவர்கள் என்னப்பட்டவர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுகிற அவர்களுடைய தவறான போதகங்களின்படி அவர்களைக் குற்றவாளிகளாகக் கூறக்கூடாது. கிறிஸ்தவ நாடுகளிலுள்ள பெருங்கூட்டத்தார் தங்கள் போதகங்களையும் கொள்கைகளையும், பழக்கங்களையும் தவறாகக் காட்டியிருக்க யுகம் முழுவதும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின் பற்றிய சில பரிசுத்தவான்களும் இருந்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

## யூதர்கள் சீக்கிரத்தில் தங்கள் மேசியாவை அறிந்து கொள்வார்கள்

நமது பிரசங்கங்களில் நாம் யூதரை கிறிஸ்தவர் களாகும் படி தூண்டவில்லை. ஆனால் அவர்களுக்குரிய மகிமையான வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்கு அவர்கள் ஆயத்தமாகும்படி அவர்களுக்கு உதவி செய்ய தேவனுடைய கொடியை உயர்த்த விரும்புகிறோம். நமது பாடத்துக்கு இசைவாக இவைகள் நிறைவேறுவதற்குரிய காலம் சமீபித்திருக்கிறதென்று கூறுவது நாம் அவர்களுக்கு அளிக்கும் ஆறுதலாகும். அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்த பின், இப்போது கிறிஸ்தவ நாடுகளில் இருக்கும் மகா உபத்திரவத்துக்குப் பின், இது நடைபெறும் என்றும், மகிமையின் மகா மேசியாவானவர் தானி 12:1-ல் வருகிற மகா மிகாவேல், யாருடைய ராஜ்யத்துக்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர் எல்லாருக்காகவும் தம்மை ஈடுபலியாகக் கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு (1 தீமோ. 2 : 5, 6) இப்பொழுது தேவனுடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டிருக்கிற அவர் (சங். 110 : 1) தங்கள் சொந்த ஜாதியைச் சேர்ந்தவரே தவிர வேறு எவரும் இல்லையென்பதை யூதர்கள் அறிந்து கொள்வார்கள் என்று தீர்க்கதரிசி தெரிவிக்கிறார். அப்போது தேவன் மகிழ்ச்சியுடன் அவர்களுடைய மனக்கண்களைத் திறப்பார். "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்" என்று தீர்க்கத்தரிசி சொல்லுகிறபடி அப்பொழுது இஸ்ரவேலரின் பாவங்களுக்காகவும் உலகத்தாரின் பாவங்களுக்காகவும் பலியான இயேசுவுக்கும் மகிமையின் மேசியாவுக்குமுள்ள ஒற்றுமையை அவர்கள் காண்பார்கள்.

இடையிலுள்ள காலத்தில் தேவன் என்ன செய்திருக்கிறார்? ஆ! இது இரகசியம் என்று நாம் திரும்பவும் கூறுகிறோம். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி பூமிக்குரிய குறைபாடுகளினாலும் கறைகளினாலும் தவறாக எடுத்துக் காட்டுவதாலும் அடிக்கடி மங்கலடைந்தாலும், கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதின்மூலம் இங்கும் அங்கும் யூதரிலிருந்தும் புறஜாதியாரிலிருந்தும் பரிசுத்தவான்கள் தேடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பரிசுத்தவான்கள் "**உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போலிருக்குமென்று**" உருவகமாக ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டபடி ஆவிக்குரிய நிலையில் தெய்வீக ஆசீர்வாதங்களில் மேசியாவுடன் பங்குபெறுவார்கள்.

ஆயினும் தூதர்களைப் போலும் அவர்களை விட மிக மேலாகவும் எந்த நிலமைகளின் கீழ் இவர்கள் ஆவிக்குரிய சுதந்திரத்தை அடைவார்கள்? ஆவிக்குரிய தன்மை விசேஷ கீழ்ப்படிதலுக்காக அளிக்கப்படும் தேவனின் வெகுமதியென்று நாம் பதிலளிக்கிறோம். நமது மனுக்குலம் பரலோகக் கலையிலோ பரலோகத்துக்குரிய தன்மையிலோ சிருஷ்டிக்கப் படாமல் பூமிக்குரிய தன்மையில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. பாவத்திலிருந்து அதற்குக் கிடைக்கும் இரட்சிப்பு அதை குறைவற்ற பூரண மனுஷீகத் தன்மைக்கும், உலகெங்கும் வியாபித்திருக்கும் ஏதேனின் சுகவாழ்வுக்கும் அதைக் கொண்டு வருகிறது. ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததி முதலாவது மேசியாவும், அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றிய பரிசுத்தவான்களான சிறுமந்தையுமாகும். தாங்கள் உயர்த்தப் படுவதற்கு அவர்கள் கொடுத்த விலை மரண பரியந்தம் அவர்கள் செய்த பிரதிஷ்டையும் அந்தப் பொருத்தனையில் விசுவாசத்துடன் நடந்து கொண்டதுமாகும். "**பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான் களை என்னிடத்தில் கூட்டுங்கள்**"; "**என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்**" என்று கர்த்தரால் தீர்க்கதரிசிகளுக்குச் சொல்லப்பட்ட இரத்தினங்கள் இவர்களே. (சங். 50 : 5; மல். 3 : 17).

"**ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளும்படி அந்நாளிலே விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.**" (ஆமோ. 9 : 11, 12; அப். 15 : 16, 17-ஐயும் பார்க்கவும்) வெகுகாலமாக அழிவின் நிலமையிலிருந்த தாவீதின் வீட்டை தேவன் திரும்ப எழுப்புவார். "**அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்** (தேவ ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியின் தலைநகர்) **சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாய்ச் சேர்வார்கள்: அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி** (பிடிவாதமாக) **நடவார்கள்.**" (எரே. 3 : 17; செப். 3 : 14-20-யும் பார்க்கவும்) உண்மையில் இப்பொழுது தேவன் இஸ்ரவேலரை விடுவிக்கும் மகா வேலையை பார்த்து உலகம் பிரமித்து நிற்கிறது. அது நித்திய கால விடுதலையாயிருக்கும். சீக்கிரத்தில் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறும்.

***

# இஸ்ரவேலரின் புது உடன்படிக்கை

## Israel's New Covenant

*''அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார். இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அப்பொழுது பூர்வ நாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்தது போல, யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.''* (மல். 3 : 1-5).

நமது சிருஷ்டிகர் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன் ஏதேனில் கீழ்ப்படியாத தமது பிள்ளைகளுக்கு மரண தண்டனை விதித்தபோது இறுதியில் ''**ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்**'' என்று அறிவித்தார் (ஆதி. 3 : 15). மறை பொருளான இந்தத் தீர்க்கதரிசனம் உலகங்கள் உண்டாவதற்கு முன் நமது கிருபையுள்ள சிருஷ்டிகர் தமக்குள் தீர்மானித்திருந்த தெய்வீக கிருபையின் முதல் அறிவிப்பாகும். எக்காலமும் உயர்குணமும் அன்பும் கிருபையுமுள்ள நமது சிருஷ்டிகர் தமது சிருஷ்டிகள் பாவத்தின் மிகுந்த கொடுமையை உணர்ந்து கொள்ளும்படி தமது சிருஷ்டிகளின் நலனுக்காக தமது கிருபையைத் தாமதிக்கச் செய்தார். தூதர்களின் நன்மைக்காகவும் அவர்கள் தம்முடைய நீதியையும், ஞானத்தையும், வல்லமையையும் பூரணமாய் அறியும்படி சரியான நீதி என்ற நோக்குநிலையில் தமது சிருஷ்டிகளிடம் நடவடிக்கை செய்வதில் தேவன் உறுதியாக இருந்தார். அவர்கள் பாவம் செய்து அதனால் நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நித்திய ஜீவனுக்குரிய உரிமையை இழந்தார்கள்.

எந்தக் கருத்திலும் அளவிலும் நித்திய வேதனை தெய்வ நோக்கத்தில் இருந்ததில்லை. மனிதனுக்கு அவர் விதித்த தண்டனை ''**செத்துக் கொண்டே சாவாய்**'' என்பதேயன்றி ''வேதனையில் ஜீவித்துக் கொண்டே ஜீவிப்பாய் என்பதல்ல என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (ஆதி. 2 : 17; எசே. 18 : 4) ஆவிக்குரிய தன்மையிலும், பூமிக்குரிய தன்மையிலும் உள்ள தமது எல்லா சிருஷ்டிகளிடத்திலும் இறுதியில் எவ்விடத்திலும் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கும் தமது நடவடிக்கைகளை விளக்கிக் காட்ட தேவன் தீர்மானித்திருக்கிறார். பல நூற்றாண்டுகளுக்குப் பின் ஆதாமின் பிள்ளைகளின் ஏழாம் தலைமுறையில் அவர்களில் ஒருவனான ஏனோக்கின் மூலம் ''மனிதனின் மத்தியில் நீதியை ஸ்தாபிக்க எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கு ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்'' என்று தேவன் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார். காலம் கடந்து போனது ஆனால் பாவம் மேலோங்கியிருக்கிறது. மகா விடுதலையாளரின் வருகை இன்னும் பிந்திய காலத்துக்குரியதாய் இருந்தது.

### ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தம்

முதலாவது ஆபிரகாமின் விசுவாசத்தையும் பயபக்தியையும் தேவன் சோதித்தபின் அவனுடன் பேசினார். சர்ப்பத்தின் தலையை நசுக்குகிறவரும், தம்முடைய ஆயிரம் பதினாயிரம் பரிசுத்தவான்களோடுகூட மகா மகிமையில் வரவிருக்கிறவருமாகிய மாபெரும் விடுதலையாளரைக் குறித்து ஆபிரகாமுக்குச் சொன்னார். அவர் ஆபிரகாமின் சந்ததி என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானபடி அவனுடைய பின் சந்ததியாரைச் சேர்ந்தவராக இருப்பார் என்று ஆபிரகாமுக்கு உறுதி கூறினார். ''**உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்**''. என்று தேவன் சொன்னார் (ஆதி. 12 : 3; 22 : 18). தேவதிட்டம் மாற்றப்படவில்லை ஆனால் அதைப்பற்றி அதிகத் தெளிவாகச் சொல்லப்பட்டது. அது முதல் தேவனால் போதிக்கப்பட்டவர்கள் மேசியாவின் ஆசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் வரும் என்று எதிர்பார்க்க அறிந்தனர். தவிரவும் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை ஒரு ஆணையினால் உறுதி செய்யப்பட்டது. அதன்பின் ஈசாக்குக்கும் அதன்பின் யாக்கோபுக்கும் உறுதி செய்யப்பட்டது (ஆதி. 22 : 16-18; 26 : 24; 28 : 14). அந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் இஸ்ரவேலர் அனைவரையும் யாக்கோபின் பிள்ளைகள் யாவரையும் தேவன் சுவிகாரம் செய்ய அடிப்படையாயிற்று. அவர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கைக்குச் சுதந்தரவாளிகளாய் இருந்தார்கள். சர்வ வல்லமையுள்ள தேவனிடமிருந்து கிடைக்கும் அவ்வளவு பெரிய புகழ் யூத ஜனங்களை சில வேளைகளில் கர்வமும் பெருமையுமுள்ளவர்களாகக் காணப்படச் செய்தால், தவறுவது மனித சுபாவம் என்பதையும் மன்னிப்பது தேவ சுபாவம் என்பதையும் மறந்து விடாதிருப்போமாக. நாம் அவர்கள் ஸ்தானத்தில் இருந்தால் நமது குறைபாடுகளும் அப்படியே வெளிப்படும்.

### பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கை

இஸ்ரவேலர் எகிப்தில் உபத்திரவம் அடிமைத்தனம் ஆகிய அனுபவங்களை அடைந்தது, அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொண்டு அதற்கு வெகுமதியாக நித்திய ஜீவனைப் பெற வேண்டுமென்ற தேவனுடைய மகத்தான ஏற்பாட்டுக்கு அவர்களை ஆயத்தபடுத்த அவசியமாயிருந்தது. (லேவி. 18 : 5; எசே. 20 : 11, 13, 21) மனுமக்கள் அனைவருக்கும் மேலாக தேவ தயவு அவர்களுக்கு அளிக்கப்பட்டதால் இஸ்ரவேலர் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். நியாயப்பிரமாண உடன்படிக்கை மத்தியஸ்தம் செய்யப்பட்டது. பாவ நிவாரண நாளில் செலுத்தப்பட்ட பலி அவர்கள் தேவனுடன் இந்த உடன்படிக்கையை செய்யும்படி அவர்களுக்கு அடையாளமாக ஒரு வருஷத்துக்கு பாவ நிவிர்த்தி செய்தது. ஆனால் அவர்கள் உடன்படிக்கையைக் கைக் கொள்ள முயன்றபோது அவர்கள் ஏமாற்றமடைந்தனர். அவர்கள் தவறிப்போனார்கள். நியாயப்பிரமாணம் ஒரு பூரண மனிதனின் திறமையின் முழு அளவுக்கு உரியதாக இருக்கிறது. இஸ்ரவேலர் மற்ற மனிதரைப்போல் பூரணக் குறைவுள்ளவர்களாய் இருந்ததால் தங்களால் முடியாத ஒன்றில் தாங்கள் தலையிட்டுக் கொண்டதாக அறிந்தனர். அவர்களில் ஒருவரும் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கைகொள்ள முடியவில்லை.

ஆகையால் முதல் வருஷத்தில் ஒருவரும் நித்திய ஜீவனைப் பெறவில்லை. ஆனால் இதை முன்னறிந்து ஜனங்கள் நித்திய ஜீவனைப்பெறும்படி தொடர்ந்து முயற்சி செய்யும்படி பாவ நிவாரண நாளை ஒவ்வொரு வருஷமும் தொடர்ந்து ஆசரிக்கும்படி தேவன் ஏற்பாடு செய்தார். வருஷத்துக்குப் பின் வருஷமும் நூற்றாண்டுக்குப் பின் நூற்றாண்டும் அவர்கள் தோல்வியடைந்து நம்பிக்கைக்குப் பதில் அதைரியம் ஏற்பட்டது. காளைகள் வெள்ளாட்டுக் கடாக்களின் பலிகளைவிட மேலான பலி தேவை என்பது பற்றியும் தமது பார்வையில் நீதிமானாக அதைவிட வேறு வழியில்லை என்பது பற்றியும் போதித்து தேவன் அவர்களுக்கு ஒரு பெரிய பாடம் கற்பித்தார். இந்த உடன்படிக்கையின் கீழ் அவர்கள் அறிவடையும் ஆசீர்வாதங்களைப் பெற்றார்களே யன்றி தாங்கள் நம்பியிருந்த நித்திய ஜீவனாகிய ஆசீர் வாதத்தைப் பெறவில்லை. ஆதலின் அவர்கள் தாங்கள் நம்பியிருந்தபடி எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும்படி தேசீய மேசியாவாக ஆபிரகாமின் தேசீய சந்ததியாகக் கூடாத நிலைமையிலிருந்தார்கள். கொஞ்சக் காலமாக தேவன் அவர்களுக்கு ராஜாக்களைக் கொடுத்தார். ஆனால் ராஜாக்கள் அவர்களின் நம்பிக்கைகளை நிறைவேற்றக் கூடாதவர்களா யிருந்தார்கள்.

இறுதியில், தாவீதின் வம்சத்தினரும், மகாஞானமும் ஐசுவரியமுமுள்ள சாலோமோனைவிட மிக மேலானவருமான ஒரு ராஜா, தாவீதின் குமாரரும் தாவீதின் ஆண்டவருமான மேசியா ஒரு தனிப்பட்ட ஆளாக இருப்பார் என்ற வாக்குத் தத்தம் கொடுக்கப்பட்டது. (சங். 110) இங்கு தேவன் திட்டமிட்டபடி தேவனுடைய நாமத்துக்கு மகிமையாக முழங்கால்களெல்லாம் முடங்கவும் நாவுகள் யாவும் அறிக்கை பண்ணவும் உலகத்தை ஜெயிக்கும்படி தங்கள் ஜாதியைக் கருவியாக உபயோகிக்கும் மகிமையின் ராஜாவாக தனிப்பட்ட ஒரு மேசியாவைப் பற்றி இஸ்ரவேலர் நினைக்க ஆரம்பித்தனர்.

## புது உடன்படிக்கை வாக்குத்தத்தம் செய்யப்பட்டது

நியாயப் பிரமாண உடன்படிக்கையில் மோசே மத்தியஸ்தம் செய்தது போல் நிறைவேறுதலான மோசே மோசேயைவிடப் பெரியவர், மேலானதும் தங்களுக்கு அனுகூலமானதும் நித்திய ஜீவனை அளிக்கக் கூடியதுமான உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கும் சிலாக்கியங் களுக்கும் தங்களை நடத்திச் செல்ல யுகமாற்றம் நடைபெற வேண்டுமென்பது இஸ்ரவேலர் படிக்க வேண்டிய அடுத்த பாடமாயிருந்தது. இந்தப் புது உடன்படிக்கை எரேமியா தீர்க்கதரிசியால் குறிப்பாக அவர்கள் முன் வைக்கப்பட்டது. (எரே. 31 : 31-34) இது மகா மத்தியஸ்தரைப்பற்றி மோசே சொல்லியிருப்பதோடு சேர்ந்து (உபா. 18 : 15-18) உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை கொள்ள உதவியாயிருந்தது.

ஒரு மகா மத்தியஸ்தர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய செய்தியாளராக (Messenger) வந்து மேலான உடன்படிக்கையை ஏற்படுத்தி அதன் மூலம் இஸ்ரவேலர் நித்திய ஜீவனை அடைந்தால், அவர் தாவீதின் சந்ததியாக அவர்களின் ராஜாவாக இருப்பார். மகா மத்தியஸ்த ராஜாவின் கீழிருக்கும் இஸ்ரவேல் ஜாதி உண்மையாகவே ஆபிரகாமின் சந்ததியாக பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க பூரண தகுதியுள்ளதாயிருக்கும். தங்கள் ஜாதிக்கு வரும் இந்த மகிமையைப் பற்றிய எண்ணம் ஒரு புத்துணர்ச்சியாக இருந்தது. அதன் காரணமாக கோரேஸ் ராஜாவின் உத்தரவுப் படி பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் கோத்திரங்கள் யாவற்றிலுமுள்ள ஐம்பதா யிரத்துக்கு அதிகமான யூதர் ஒன்று கூடினர். மேலும் அவர்களின் மகா ஆசீர்வாதமான திரும்பக் கொடுத்தலுக்கு முன் சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாண உடன்படிக்கை, புது உடன்படிக்கைக்கு, மேலான உடன்படிக் கைக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலம் தெரிவித்தார். எல்லா நாடுகளிலிருந்தும் அவர்களைத் திரும்பச் சேர்த்து, ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி அவர்களை பெரிய ஜாதியாக்கி மற்ற ஜாதிகளை ஆசீர்வதிக்க அவர்களை உபயோகிக்கும் காலத்தைப் பற்றிப் பேசும் போது ''**இஸ்ரவேல் வீட்டாரே நான் இப்படிச் செய்வது உங்கள் நிமித்தமாக அல்ல என் பரிசுத்த நாமத்தினிமித்தமே இப்படிச் செய்கிறேன்**'' என்று கர்த்தர் சொல்லுகிறார். பிறகு அவர் தமது அன்புக்கும் தயவுக்கும் அவர்களைத் திரும்ப ஏற்றுக் கொள்ளும்போது எல்லா நாடுகளிலிருந்தும் கூட்டிச் சேர்த்து அவர்களின் சொந்த நாட்டுக்குக் கொண்டுவருவேன் என்று அவர்களுக்குச் சொல்லுகிறார். அவர் அவர்களைச் சுத்திகரித்து அவர்களின் கல்லான இருதயத்தை அகற்றி புது இருதயத்தைக் கொடுத்து பாழான அவர்கள் நாட்டை ஏதேன் போல் ஆகச் செய்வார். (எசே. 36 : 22-38).

## சோதோமியருக்கும் சமாரியருக்கும் உள்ள நம்பிக்கை

இஸ்ரவேலர் கீழ் மக்களென்றும் பாவிகளென்றும் இகழ்ந்தவர்களாகிய சோதோமியரையும் சமாரியரையும் திரும்பக் கொண்டு வந்து அவர்களின் பெருமையை அடக்குவதாக வாக்களித்தார். இந்த ஜனங்களில் யாரும் எந்த காலத்திலும் இஸ்ரவேலர் செய்தது போல் தேவ அன்புக்கு எதிர்ப்பாக அவ்வளவு பெரிய பாவத்தைச் செய்யவில்லை யென்றும் இஸ்ரவேலரைத் திரும்ப ஆசீர்வதிக்கும்போது அவர்கள் மத்தியில் இந்த ஜனங்களையும் ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவருடைய வார்த்தைகளை எடுத்துக் கூறுவோம். '' **உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள், சமாரியாவும் அவள் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள் ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். அவர்களை** (சோதோமியரையும் சமாரியரையும்) **நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன். உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை.** (சீனாய் மலையில் இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரங் களுக்கும் கொடுத்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் அல்ல பிற்காலத்தில் ஏற்படும் புதிய உடன்படிக்கையின் கீழ்) **உன்னோடே என் உடன்படிக்கையைப் பண்ணி ஏற்படுத்துவேன். நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது நீ நினைத்து வெட்கி உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய்**''. (எசே. 16 : 55-63). இந்தப் புதிதும் மேலானதுமான உடன்படிக்கை மோசேயை விட மகிமையுள்ள மத்தியஸ்தரும், தாவீதைவிட அதிக மகிமையுள்ள ராஜாவுமான

தனிப்பட்ட மேசியாவால் மத்தியஸ்தம் செய்து வைக்கப்பட வேண்டும். இஸ்ரவேலர் இவரை எதிர்பார்த்தே ஆவலுடன் காத்திருக்கின்றனர். தாழ்மையுள்ள நசரேயனாக கொல்கொதா வில் மரித்தவரை இனமறித்து கொள்ள அவர்கள் தவறியதற் காக நாம் ஆச்சரியப்படக் கூடுமா? ஆச்சரியப்பட முடியாது மகிமையான தீர்க்கத்தரிசன அடையாளங்களுக்கும் அந்தத் தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்ற வந்தவருடைய தாழ்மை யான தோற்றத்துக்குமுள்ள சம்பந்தத்தை பரிசுத்தாவியின் விசேஷ உதவியில்லாமல் ஒருவரும் அறிந்து கொள்ள முடியாது. ஆயினும் மகிமை பொருந்திய மகா மேசியாவாகிய இயேசு, தமது இரண்டாம் வருகையில், ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் வந்திருந்து, யூதர் எதிர்பார்த்திருந்த தையும், தீர்க்கத்தரிசனத்தில் குறிப்பிட்டிருக்கிறதையும், பூரணமாக நிறைவேறச் செய்வதை நாம் காண்கிறோம். சிலர் காணக்கூடும். ஆனால் மற்றவர்கள் குத்தப்பட்ட அவரே தேவகுமாரனாக மகா மகிமையுள்ளவராக இஸ்ரவேலரையும் அவர்கள் மூலம் புற ஜாதியாரையும் ஆசீர்வதிப்பவர் என்பதை இன்னமும் அறியக் கூடாதவர்களாக இருக்கிறார்கள். (சங். 22 : 16; சகரி. 12 : 10).

''**அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத் தோடே பண்ணப் போகிற உடன்படிக்கையாவது நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்**'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31 : 31-34) என்றபடி இஸ்ரவேல் குடும்பத்தோடும் யேகோவா செய்யும் புது உடன்படிக்கை மேசியாவால் செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. பாவநிவாரண நாளில் யூத ஜெபபுஸ்தகத்திலுள்ள கீழ்க்கண்ட பகுதியைச் சொல்லும் போது பக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் பாவத்தைச் சுமப்பது மேசியா என்பதை ஒப்புக் கொள்கிறான்.

## யூதர்களுடைய ஜெபத்தின் மொழிபெயர்ப்பு

நமது நீதியாயிருக்கிற மேசியா நம்மை விட்டு விலகிச் சென்றார். பயங்கரம் நம்மைப் பிடித்துக் கொண்டது. நம்மை நீதிமானாக்குகிறவர் ஒருவருமில்லை. நமது அக்கிரமத்தின் நுகத்தடியையும் மீறுதலின் நுகத்தடியையும் சுமந்து நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். நமது அக்கிரமங் களுக்கு மன்னிப்புண்டாகும்படி நமது பாவங்களை அவர் தமது தோளில் சுமந்தார். நித்தியமானவர் அவரை புது ஜீவியாக சிருஷ்டிக்கும்போது அவருடைய காயத்தால் நாம் குணமடை வோம். இன்னோனின் கையால் நாம் லீபனோன் மலையில் இரண்டாவது தடவையாகக் கூட்டிச் சேர்க்கப்படும்படி சேயீரி லிருந்து அவரை எழுப்பி பூமியின் எல்லையிலிருந்து அவரைக் கொண்டு வாருங்கள் (இன்னோன் என்பது மேசியாவின் மற்றொரு பெயர்).

## மேசியா வரும் நாளை சகித்தல்

நமது பாடம் இதே மகா மேசியாவை, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரை, ராஜாதி ராஜாவை, கர்த்தாதி கர்த்தாவைப் பற்றிக் கூறும் மற்றொரு தீர்க்கத் தரிசனத் திலிருந்து எடுத்ததாகும். அவர் தமது பிதாவாகிய மகிமை பொருந்திய யெகோவாவின் பிரதிநிதியாக சகல சத்துருக் களையும் நமது பாதத்துக்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், சாத்தான் கட்டப்பட்டு அழிக்கப்படுகிறவரைக்கும், ஆதாமின் சந்ததி தேவ தண்டனையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு புதிய உடன்படிக்கையின் கீழ் பாவத்திலும் இகழ்ச்சியிலும் மரணத்தி லுமிருந்து பூரணத்துக்கும் நித்திய ஜீவனுக்கும் உயர்த்தப்பட்டு மனமற்றவர்களும் கீழ்ப்படியாதவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுகிற வரைக்கும் அவர் ஆளுகை செய்யவேண்டும். தான் அறிவிக்கிற புது உடன்படிக்கையின் மேசியாவானவர் மகிமை பொருந்திய மத்தியஸ்தரென்றும் நெடுங்காலமாக அவர்கள் காத்திருத்தவரும் அவர்கள் விரும்பு கிறவருமான நிறைவேறுதலான ராஜாவாகவும் இருக்கிறவர் என்று மல்கியா தீர்க்கதரிசி கூறுகிறார். அவர் தமது ஆலயத் துக்கு வருவார் என்பது அவர் நிறைவேறுதலான தீர்க்கத் தரிசியாகவும் நிறைவேறுதலால் ராஜாவாகவுமாத்திரமல்ல மெல்கிசெதேக்கின் முறையின் படியான நிறைவேறுதலான ஆசாரியராகவும் இருப்பார் என்பதைக் குறித்துக் காட்டுகிறது (சங். 110 : 4; சகரி. 6 : 12, 13)

ஆனால் அவர்கள் வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த புது உடன்படிக்கையின் மகிமையுள்ள மேசியாவைத் தேடவேண்டுமென்ற மகிழ்ச்சியான அறிவிப்புக்குப் பின் நிறைவேறுதலான கர்த்தரை கண்டுபிடிக்கும்படி அவருடைய நாள் சோதனை நிறைந்ததாயும் விசேஷ பரீட்சையும் பரிசோதனையும் உள்ளதாயும் இருக்குமென்று அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். அவர் களிம்பை நீக்கி சுத்தமான உலோகத்தை பெறும்படி புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலிருப்பார். கொடிய சோதனைகளும் பரீட்சைகளும் இதனால் குறிப்பிடப்படுகிறது. அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் விசுவாசமுள்ளவர்களுமான வர்கள் ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்களாகும்படி ஒரு பெரிய கழுவி சுத்திகரித்தல் நடைபெறும் என்ற கருத்தில் அவர் வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலிருப்பார் (மல். 3: 2). அப்பொழுது கர்த்தருக்குச் செய்யும் யூதாவின் பிரதிஷ்டையும் எருசலேமின் பிரதிஷ்டையும் பூர்வ நாட்களிலிருந்தாற்போல் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த பயபக்தியின் ஆவி யூதர்களுக்குள் புத்துயிர் பெறுகிறதென்று நாம் அறிகிறோம். குறிப்பாக எருசலேமோடு சேர்த்து எண்ணப்படுகிறவர்கள் மத்தியிலும் சீயோனிய (Zionist) இயக்கத்தின் மத்தியிலும் பயபக்தியின் ஆவி புத்துயிர் பெறுவதை அறிகிறோம். இதுவரை இது யூத தேசீய மயமாக்கும் நோக்கத்திலும் தேசத்திலிருந்து சிதறடிக்கப்பட்டவர்களுக்கு வசிப்பிடம் வேண்டுமென்ற நோக்கத்திலும் முக்கியமாக ஒரு அரசியல் இயக்கமாக இருந்தது. எனினும் இப்போது தேவனை அண்டிச் சேர்வதில் விசுவாசமும், நித்திய உடன்படிக்கையைப் பெற ஆயத்தமாகும்படி பூமிக்குரிய எருசலேமையும் அதன் நலன்களையும் திரும்பக் கொண்டுவருவதற்கு தீவிரப் படுத்துவதில் உதவி செய்வதின் மூலம் தங்கள் விசுவாசத்தைக் காட்டவும் உண்மையான ஒரு இயக்கம் ஏற்படுவதற்குரிய காலம் வந்திருக்கிறது.

## உடன்படிக்கையின் தூதன்

பிதாவினால் முதலாவது ஜெநிபிக்கப்பட்டவர் சிருஷ்டிப் பின் மகா வேலையில் உடன்படிக்கையின் மகா தூதனாகவும், மகா தீர்க்கதரிசியாகவும், இஸ்ரவேலரின் ஆசாரியரும் ராஜாவுமாகவும், தானி. 12 : 1-ல் வருகிற பிரதான மிகாவேலாக வும் மகிமைப்படுத்தப்பட்டார். ஆனால் இந்த உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவதின் சம்பந்தமாக பல பரீட்சைகள்

இருந்தன. (1) பாவமுள்ள மனிதனாக அல்ல பூரண மனிதனாக, பரிசுத்தரும், பிழையற்றவரும், கறைபடாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான மனிதனாவதற்கு பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்தவராய் விசுவாசத்துடன் பரலோக மகிமையை கைவிட்டார். (2) இவ்வாறு மீட்பராவதற்கு ஆயத்தமானார், தமது பூலோக நலன்களையெல்லாம் முற்றிலும் தியாகம் செய்வது அவருடைய சிலாக்கியமாக இருந்தது. மிக உயர்ந்த நிலைமையில் ஆவிக்குரிய தன்மையில் யோர்தானில் அவரை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்க பிதாவானவர் சித்தம் கொண்டார். $3\frac{1}{2}$ வருஷங்களாக அவருடைய பலி, பலி பீடத்தில் எரிந்து கொண்டிருந்தது. (தானி. 9 : 27) உண்மையாகவே அது நியாயப் பிரமாணத்தின் கீழ் செய்யப்பட்ட எந்த மிருகத்தின் பலியையும் விட மேலானதாக இருந்தது. ஏனெனில் அது கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் மனித ஜீவனுக்கு மனித ஜீவன் (உபா. 19 : 21) என்றபடி ஆதாமுக்கு சரியான விலையாக இருந்தது. (3) இவ்வாறு மேசியாவானவர் பூமிக்குரிய தமது ஜீவனை பலியாக செலுத்தியபோது ஆதியில் தாம் இருந்த மேன்மையும் மிக மகிமையுமான நிலைமையை போன்ற ஆவிக்குரிய நிலமைக்கு மனுஷீக தன்மையிலிருந்து உயிர்த்தெழும் மாறுதலின் அனுபவத்திலிருந்தார். இவ்விதமாய் அவர் உடனே பலியாகவும் அந்தப் பலியைச் செலுத்துகிற ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆசாரியராகவும் இருந்தார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபோது தம்மை பலியாகச் செலுத்துவது முடிந்துவிட்டது, ஆவியின் ஜீவியாக அவரது பூரணத்துவம் பூர்த்தியடைந்தது. (எபி. 10 : 1-14; 13 : 11-13).

## இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதில் தாமதித்ததின் காரணம்

அப்படியானால் தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், ராஜாவாகவும், இஸ்ரவேலருக்கும், இஸ்ரவேலர் மூலம் உலகத்தாருக்கும் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் தமது மகத்தான வேலையை ஏன் அவர் உடனடியாக ஆரம்பிக்கவில்லை? நிறைவேறுதலான பாவ நிவாரண நாளில் ஒன்றுக்கு அதிகமான பலிகள் செலுத்தப்பட வேண்டுமென்பது தேவ ஏற்பாடாயிருந்தது. இந்த சுவிசேஷயுக முழுவதிலும் உயிர்த்தெழுந்து மகிமைப்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியரும், மத்தியஸ்தரும், தீர்க்கதரிசியும் ராஜாவுமானவர் சொற்பப் பேரான பரிசுத்தவான்களை உலகத்திலிருந்து ஒரு சிறு மந்தையைத் தேர்ந்தெடுத்து பரிசோதித்து தகுதியுள்ளவர்களாகக் கண்டு தம்முடன் மகிமைப்படுத்தப் படுவதற்காக ஆசீர்வாத மான தமது மகிமையின் ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்வதில் தாமதித்திருக்கிறார்.

மல். 3 : 3-ல் வருகிற நிறைவேறுதலான ஆசாரியரும் லேவியருமாகிய மணவாட்டி வகுப்பாரும் தோழி வகுப்பாரும் (சங். 45 : 14, 15) முற்றிலும் பரீட்சிக்கப்பட்டு விசுவாசமுள்ளவர் களாகக் காணப்பட்டபின் ஆபிரகாமின் சந்ததியாக இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதும், இஸ்ரவேலர் மூலம் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதும் நடைபெறும். இவ்வாறு பார்க்கும்போது புது உடன்படிக்கையின்படியான இஸ்ரவே லரின் மகா தூதனானவர் வெளிப்படுவது, யூதருக்கு மாத்திரமல்ல அதே புது உடன்படிக்கைக்குக் கீழ்ப்படி வதின்மூலம் இஸ்ரவேலரின்கீழ் ஆசீர்வதிக்கப்படும் உலகத் தாருக்கும் மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

தீர்க்கதரிசியின்மூலம் தேவன் கொடுக்க மேற்கொண்ட செய்தியைக் கவனிக்கவும். ''நான் நியாயத்தீர்ப்புச் செய்யும்படி உங்களிடத்தில் வந்து சூனியக்காரருக்கும், விபசாரருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல், விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரனின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார் (மல். 3 : 5) மேசியாவின் ராஜ்ஜியத்தில் சத்திய ஒழுங்குகளில் உண்மையும், சுத்தமும் தேவனுடன் இசைவும் தேவை என்பது இங்கு தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம் புது உடன்படிக்கையின் ஒழுங்கின்கீழ் இஸ்ரவே லருக்குரிய இந்தப்பாடம் இறுதியில் எல்லா ஜாதிகளுக்கும் பொருந்துவதாகும். புது ஒழுங்கின்கீழ், இஸ்ரவேலரின் புது உடன்படிக்கையின்கீழ் பூமியிலுள்ள எல்லா வம்சங்களும் இஸ்ரவேலருக்கும் பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்கும் மகா மத்தியஸ்தரானவரிடம் விசுவாசம் வைப்பதின் மூலம் உண்மையான இஸ்ரவேலராகும் சிலாக்கியம் பெறுவார்கள்.

***

# சீயோனுக்கு தயை செய்யும் காலம்

## The Time to Favour Zion

*''தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர் அதற்குத் தயை செய்யுங் காலமும் அதற்காகக் குறித்த நேரமும் வந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள் மேல் வாஞ்சை வைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள். கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார். அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும் பூமியிலுள்ள ராஜாக்கள் எல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்.'' (சங். 102 : 13-17).*

மகா சிருஷ்டிகர் ஒருவர் இருப்பது மாத்திரமல்ல மானிட ஜாதிகளிடத்தில் அவருடைய நடவடிக்கைகளிலும் பூமியின் காரியாதிகளை ஒழுங்குபடுத்துவதிலும் அவர் திட்டவட்டமும் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவருமாயிருக்கிறார். உதாரணமாக நாம் பார்க்கிற வசனம் சீயோனுக்குத் தேவ தயவு திரும்பக் கிடைக்கும் காலத்தை குறிக்கப்பட்ட காலத்தைக் கூறுகிறது தேவன் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய காலத்தைக் குறித்திருக்கிறார். அவர் குறித்த நேரத்தில் தாவீது சாலொமோன் ஆகியோர் அவருக்கு முன்னடையாளமாக இஸ்ரவேல் ராஜ்ஜியத்தில் கர்த்தருடைய சிங்காசனத்தில் வீற்றிருந்தனர். (1 நாளா. 29 : 23) பின்னால் தேவனின் அடையாளமான ராஜ்யத்தின் சிங்காசனத்தில் வீற்றிருந்த தாவீதின் சந்ததியில் வந்த கடைசி ராஜாவாகிய சிதேக்கியாவிடமிருந்து அரசாங்கம் நீக்கப்பட்டது. அவனைப்பற்றி ''**இஸ்ரவேலை ஆளுகிற**

**அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே அக்கிரமத்துக்கு முடிவு வரும் காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப் போடு, அது இனி முன் போல் இராது தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன் கவிழ்ப்பேன்.உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்: அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்**'' என்று வாசிக்கிறோம் (எசே. 21: 25-27) தாவீதுக்குக் கிடைத்த தேவனின் வாக்கு அவனுடைய கர்ப்பப் பிறப்பாகிய ஒருவர் கர்த்தருடைய சிங்காசனத்தில் எக்காலமும் வீற்றிருப்பார் என்பதே (2 சாமு. 7 : 12-16) நெடுங்காலமாக வாக்களிக்கப்பட்ட இஸ்ரவேலின் ராஜாவாகிய மேசியா தாவீதின் சந்ததியின் வேரும் கிளையுமாய் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராயிருப்பார் என்பதே இந்த வாக்குத்தத்தத்தின் முக்கிய நோக்கமாகும் (ஏசா. 11 : 10) அடையாளமான ராஜ்யத்தைப் போல் அவருடைய ராஜ்யம் முடிவடையாததாய் நித்தியமானதாய் ''**உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்**'' (ஆதி. 12; 22 : 18) என்று தேவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தத்தை முற்றிலும் நிறைவேற்றக் கூடியதாயிருக்கும்.

சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யம் எடுக்கப்பட்டபோது புறஜாதி ராஜ்யங்கள் அங்கீகரிக்கப்பட்டன ஆனால் இஸ்ரவேல் ராஜ்யம் இருந்த அதே முறையில் அல்ல. அவற்றில் ஒன்றும் தேவராஜ்யம் என்றழைக்கப்படவில்லை நித்தியமான ஆட்சி அளிக்கப்படவுமில்லை ஆனால் இஸ்ரவேலர் தேவ தயவிலிருந்து நீக்கப்பட்டிருந்த காலத்தில் குத்தகையாக அளிக்கப்பட்டிருந்தது. குறிக்கப்பட்ட நேரத்தில் குத்தகையாக விடப்பட்ட உலக அதிகாரம் முடிவுக்கு வந்தது. உலகத்தில், தேவராஜ்யமாக இருக்கும்படி இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது, அது அவர்களுக்குத் திரும்பக் கிடைக்க வேண்டியதாயிற்று. நமது வசனத்தில் காட்டப்பட்ட குறிக்கப்பட்ட காலம் இது.

## புறஜாதி ராஜ்யத்தைப் பற்றிய தரிசனம்

தானியேலின் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி (தானி. 2) சிதேக்கியா சிங்காசனத்திலிருந்து நீக்கப்பட்டபோது தேவன் உலக அதிகாரத்தை நேபுகாத் நேச்சாருக்கும் அவன் வாரிசுகளுக்கும் குத்தகையாகக் கொடுத்தார். நேபுகாத் நேச்சார் தரிசனம் கண்டான் ஆனால் தரிசனம் ஞாபகத்துக்கு வரவில்லை. கொஞ்சக் காலத்துக்குமுன் சிறைப்பட்டவனான தானியேல் தீர்க்கத்தரிசி உலகத்திலுள்ள யாவரிலும் ராஜாவின் சொப்பனத்தைச் சொல்லவும், அதற்கு விளக்கம் கூறக்கூடியவனென்றும், அந்த சக்தி அவனுக்குத் தேவனால் கிடைத்ததென்றும் தெய்வாதீனமாக ராஜாவிடம் அறிமுகப்படுத்தப்பட்டான். (வச. 28) தரிசனத்தில் காணப்பட்டது ஒரு பெரிய சிலை (தானி. 2 : 31-45) அதன் தலை பொன்னாக இருந்தது. அது நேபுகாத் நேச்சாரின் ராஜ்யத்தை - பாபிலோனைக் குறித்துக் காட்டியது. அதன் மார்பும் புயங்களும் வெள்ளியாக இருந்தது. அது மேதிய பெர்சியா ராஜ்யத்தைக் குறித்துக் காட்டியது. அதன் வயிறும் தொடைகளும் வெண்கலமாயிருந்தது. அது கிரேக்க ராஜ்யத்தைக் குறித்துக் காட்டியது. அதன் பலத்தகால்கள் இரும்பாக இருந்தது. அது கிழக்கிலும் மேற்கிலுமிருந்த ரோம ராஜ்யத்தைக் குறித்துக்காட்டியது. அதன் பாதம் இரும்பும் களி மண்ணுமாயிருந்தது. அது போப்புவின் அதிகாரத்தைக் குறித்துக் காட்டியது. இரும்பு உலக அரசாங்கத்தைக் காட்டுகிறதாயிருக்கிறது. களிமண் அதை கல்லைப் போல் காணப்படச் செய்து இப்போது ஐரோப்பாவிலுள்ள பத்து பாஷைக்காரரின் அரசியலோடு சபை கலந்திருப்பதைக் குறித்துக் காட்டுகிறது. புற ஜாதி அரசாங்கங்கள் உலகத்தை ஆளும் காலம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவின் ராஜ்ஜியம் ஸ்தாபிதமாகும் காலம் வரையுள்ள காலமாகும், இந்தக் காலம் அடையாளமான பாஷையில் ஏழு காலங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஏழு வருஷங்கள் - உண்மையில் யதார்த்தமான வருஷங்கள் அல்ல அடையாளமான வருஷங்களாகும். தானியேலினால் முன்னறிவிக்கப்பட்ட மகா உபத்திரவ காலத்தில் புறஜாதி அரசாங்கங்களின் உலக அதிகாரத்தின் குத்தகைக் காலம் முடிவடைய வேண்டும். (தானி. 12 : 1) அப்பொழுது உலக அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மேசியா எழுந்தருள வேண்டும். எல்லா ஜாதிகளும் மேசியாவுக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்ய வேண்டியதிருப்பதால் புறஜாதி அரசாங்கங்கள் அழிக்கப்பட வேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலர் உலக காரியங்களில் முன்னுக்கு வர வேண்டும். ஏனெனில் மேசியாவின் ராஜ்யத்தில் மனிதரின் மத்தியில் அவர்கள் அவருடைய பிரதிநிதிகளாகவும் கருவிகளாகவும் இருக்க வேண்டும். அந்தகாரத்தின் அதிபதியாகிய இந்த உலகத்தின் அதிபதியின் ராஜ்யம் கண்ணுக்குத் தெரியாமல் ஆவிக்குரிய ராஜ்யமாயிருப்பது போல் மேசியாவின் ராஜ்யமும் ஆவிக்குரியதும் கண்ணுக்குத் தெரியாததுமாயிருக்கும். ஆயிர வருஷ நீதியின் ஆட்சியில், ஆரம்பத்தில் மேசியா அந்தகாரத்தின் அதிபதியைக் கட்டி அந்த ஆட்சியின் முடிவில் அவனை அழிப்பார். அதன் பிறகு உலக ராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைப்பார். அப்பொழுது மனுக்குலம் பூரணமடைந்ததாயிருக்கும். ஏனெனில் மனப்பூர்வமாகப் பாவம் செய்கிற அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் (சங். 145 : 20) அந்த நேரத்தில் மேசியாவின் ஆட்சி இஸ்ரவேலரை ஆசீர்வதித்து உயர்த்துவது மாத்திரமல்ல, நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன் தேவன் ஆபிரகாமுக்களித்த வாக்குத்தத்தின்படியும் ஆணையின் படியும் இஸ்ரவேலரின் மூலம் அந்த ஆசீர்வாதம் எல்லா ஜாதியாருக்கும் ஜனங்களுக்கும் பாஷைக்காரருக்கும் வந்து சேரும். (ஆதி. 12 : 3; 22 : 18).

## தரிசனத்தில் காணப்பட்ட மேசியாவின் ராஜ்யம்

தானியேலினால் விவரித்துக் காட்டப்பட்டபடி (தானி. 2 : 34-45) இதெல்லாம் நேபுகாத் நேச்சாரின் தரிசனத்தில் சுருக்கமாகவும் அழகாகவும் காட்டப்பட்டிருக்கிறது. மனித உதவியில்லாமல் மலையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கல்லை அவன் கண்டான். அவன் அதைக் கவனித்து கல் சிலையின் பாதங்களில் மோதுவதைக் கண்டான். அதன் பலனாக சிலை முற்றிலும் அழிந்ததைப் பார்த்தான். சிலையின் பாதங்களில் மோதியது உலக ராஜ்யங்களுக்குப்பதில் தேவ ராஜ்யத்தின் ஸ்தாபிதத்துக்கு ஆயத்தமாகும்படி தற்கால புறஜாதி ராஜ்யங்களையும் ஸ்தாபனங்களையும் நொறுக்கும் தேவ வல்லமையை அடையாளமாகக் குறித்துக் காட்டுகிறது. கல்லினால் அடையாளமாகக் காட்டப்பட்ட மேசியாவின் ராஜ்யம் சிலை இருந்த இடத்தை மாத்திரமல்ல படிப்படியாக விரிவடைந்து உலகம் முழுவதையும் நிரப்பியதாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் குறிப்பிலிருந்து சீயோனை தேவன் திரும்பக் கூட்டிச் சேர்க்க உறுதி செய்யப்பட்டதும் மாற்ற முடியாததுமாகிய ஒரு காலம் இருக்கிறதென்பதை நாம் நம்புவது கஷ்டமாகாது. வேறு இடத்தில் இந்தக் காலம் எப்போது வரும் என்பதை வேதாகமம் அதிக திட்டவட்டமாகக் கூறுகிறது.

## இஸ்ரவேலரின் ஏழுகால தண்டனை

இஸ்ரவேலர் தேவனின் கற்பனையை மீறியதற்காக அவர்களுக்கு வரும் தண்டனையைத் தேவன் முன்னறிவித்ததை லேவி. 26 : 14-45-ல் வருகிற குறிப்பிடத்தக்க தீர்க்கத்தரிசனத்தால் அறிகிறோம். வசனம் 14-17-ல் நியாயாதிபதிகள், ராஜாக்கள் காலத்தில் அவர்கள் செய்த மீறுதல்களும் அதற்கு வரும் தண்டனைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இன்னும் திருந்தாததால் வசனம் 18-ல் அவர்களுக்கு ஏழுகால தண்டனை வருமென்று எச்சரிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19, 20 வசனங்கள் நியாயாதிபதிகள் ராஜாக்கள் காலத்துக்குத் திரும்பி அக்காலத் தண்டனையைத் திரும்பவும் தீர்க்கத்தரிசனமாகக் கூறுகின்றன. இதுபோதாமல் ஏழுகால தண்டனையைப் பற்றி இரண்டாவது தடவையாக வசனம் 21-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு இன்னமும் என்ற சொல் அவ்வசனத்தில் இருக்கக் கூடாது ஏனெனில் மேற்கொண்டு ஏழுகால தண்டனை அங்கு குறிப்பிடவில்லை. அதே விஷயம் மூன்றாவது தடவையாக 22-24 வசனங்களில் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக இது நாலாவது தடவையாக 25, 28 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வற்புறுத்திக் கூறுவதற்காக இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

நியாயாதிபதிகள் ராஜாக்கள் காலங்களில் தண்டனையைப் பற்றி நாலு தடவை அழுத்திக் கூறியிருப்பதை நாம் பார்ப்பதிலிருந்து, நியாயாதிபதிகள் ராஜாக்கள் காலங்களில் தண்டனையைத் தொடர்ந்து அதோடு சேர்க்கப்பட்டுள்ள ஏழு காலங்களில் தண்டனையின் பொருள் என்ன? அது அடையாளமான ஏழு வருஷங்களைக் காட்டுகிறதென்று அறிகிறோம். அதாவது 7 x 360 வருஷங்கள். ஏனெனில் 360 வருஷங்கள் தீர்க்கதரிசனத்தில் அடையாளமான ஒரு வருஷமாகும். இதை நாம் தானி. 9 : 24-27-ல் வருகிற அடையாளமாக 70, 69, 62 வாரங்களிலிருந்தும், அடையாளமாக ஏழு காலங்களை அல்லது வருஷங்களைக் குறிப்பிடுவதாக நேபுகாத்நேச்சாரின் மேல் நிறைவேறின யதார்த்தமான ஏழு காலங்கள் அல்லது வருஷங்களிலிருந்து அறிகிறோம் (தானி. 4 : 23; 12 : 7, 11, 12; வெளி. 12 : 14; 11 : 2, 3) அடையாளமான ஏழு வருஷங்கள் 7 x 360 அல்லது 2520 வருஷங்களாகின்றன. அடையாளமான ஒரு வாரம் ஏழு வருஷங்களென்றும் (ஒரு நாள் ஒரு வருஷம்) அடையாளமான ஒரு மாதம் 30 வருஷங்களென்றும் (அடையாளமான மாதம் 30 வருஷங்கள்) இவ்வாறு அடையாளமாக ஒரு வருஷம் 360 வருஷங்களென்றும் நாம் அறிகிறோம்.

## புறஜாதியார் காலம் 1914–ல் முடிந்தது

புற ஜாதியார் காலம் என்று சொல்லுவதிலிருந்து (லூக். 21 : 24) கி.மு. 607-லிருந்து கி.பி. 1914 வரை (கிறிஸ்தவ நாடுகளின் நிறைவேறுதலான அழிவுக்காக சாத்தான் அகழியில் மறைந்திருந்து தாக்கும் உலக யுத்தத்தை ஆரம்பித்த போது) 2520 வருஷங்களைத் தீர்க்கதரிசனம் குறிப்பிட்டுக் காட்டுகிறதென்பதை நாம் அறியச் செய்கிறது. (சிதேக்கியா நீக்கப்பட்டு நேபுகாத்நேச்சாரால் தேசம் பாழக்கப்பட்டு புற ஜாதியார் ஆட்சி ஆரம்பமானது முதல்) ஏனெனில் கி.மு. 607 முதல் கி.பி. 1914 வரை நியாயப் பிரமான உடன்படிக்கையை மீறியதால் தேசம் புறஜாதியாரால் மிதிக்கப்பட்டு இஸ்ரவேலர் விசேஷ தண்டனையடைய வேண்டியிருந்தது. இவ்வாறு புறஜாதியாருக்கு 2520 வருஷங்களாக குத்தகையாக விடப்பட்டிருந்த அதிகாரம் 1914-ல் முடிந்ததென்று அறிகிறோம். அந்த நேரத்தில் மேசியா புறஜாதியாரின் அதிகாரத்தை மகா உபத்திரவத்தில் அழிக்க ஆரம்பித்தார். (தானி. 12 : 1; சங். 46 : 6-10; 110 : 2, 5, 6) 1914 இலையுதிர்காலம் முதல் கோபத்தின் நாள் ஆரம்பித்தது முதல் யூதரும், புறஜாதியாரும் எந்த உடன்படிக்கைக்கும் நீங்கலாக மானிட பாவங்களுக்காக துன்பத்தை அனுபவிக்கிறார்கள். பிந்திய துன்பத்தில் இஸ்ரவேலர் பங்கு கொள்வது ''யாக்கோபின் உபத்திரவம்'' என்றழைக்கபடுவதின் முதல் கட்டத்தின் ஒரு பாகமாகும். (எரே. 30 : 5-7) முதல் பகுதி 1881-ல் ஆரம்பமானதால் இது அதைத் தொடர்ந்ததாகும். இனி வரவிருக்கும் இரண்டாவது பகுதி எசே. 38, 39-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

## சிதேக்கியா நீக்கப்பட்டபின் இஸ்ரவேலர்

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் சிதேக்கியாவை சிங்காசனத்திலிருந்து நீக்கி, அவனையும் ஜனங்களையும் பாபிலோனுக்கு சிறைகளாகக் கொண்டு போய் எருசலேமையும் தேவாலயத்தையும் அழித்து நாட்டைப் பாழாக்கி தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நிறைவேற்றிய காலத்தினை (கி.பி. 607) இஸ்ரவேலரின் சரித்திரத் தொடர்பை நாம் அறிகிறோம் (எசே. 21 : 25-27; எரே. 25 : 9-11; 2 நாளா. 36 : 17-21) தீர்க்கதரிசனத்தில் தேசம் பாழாய்க் கிடக்கும் கால அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது எழுபது வருஷங்களென்று கொடுத்திருக்கிறது. இதுவும் நிறைவேறி விட்டது. பெர்சியரின் ராஜாவாகிய கோரேஸ் பாபிலோனை ஜெயித்தான். எழுபது வருஷங்களின் முடிவைக் குறிக்கும் அவனுடைய ஆட்சியின் முதல் வருஷத்தில் இஸ்ரவேலர் தங்கள் நாட்டுக்குச் சென்று எருசலேமைத் திரும்பக் கட்ட அனுமதி கொடுத்தது மாத்திரமல்ல அப்படிச் செய்ய உதவியும் செய்தான் (2 நாளா. 36 : 22, 23; எஸ்றா 1) ஆதலின் எஸ்றாவின் புஸ்தகத்திலும் நெகேமியாவின் புஸ்தகத்திலும் சொல்லியிருக்கிறபடி இஸ்ரவேலரில் அநேகர் திரும்பிச் சென்றனர். அப்பொழுது எருசலேம் திரும்பக் கட்டப்பட்டு சிறை சென்றவர்கள் திரும்பி வந்தாலும் இஸ்ரவேலருக்கு பூரண சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கோரேஸ் ராஜாவினால் தங்கள் சுயநாட்டுக்கு அனுப்பப்பட்டு தனிச் சுதந்திரம் அடைந்திருந்தாலும் அவர்கள் ஒரு ஜாதியாக தொடர்ந்து மேதிய பெர்சியருக்கும் கிரேக்கருக்கும், ரோமருக்கும் அடங்கியவர்களாக இருந்தார்கள்.

## 70 வாரங்களைப் பற்றிய தானியேலின் தீர்க்கத் தரிசனம்

தானியேல் தீர்க்கத்தரிசி 70 வாரங்களைப் பற்றித்

தீர்க்கத் தரிசனம் சொல்லியிருக்கிறார் (தானி. 9 : 24-27) அதில் 69 வாரங்கள் எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டது முதல் பிரபுவாகிய மேசியா வந்தது வரையுள்ள காலமாகும் (வச. 25) ஒரு நாளை ஒரு வருஷமாகக் கொண்டால் (எசே. 4 : 6) எழுபது வாரங்கள் அடையாளமான 490 வருஷங்களாகும். அடையாளமான 69 வாரங்கள் (483 வருஷங்கள்) நெகேமியா கி.மு. 454-ல் உத்தரவு பெற்றது முதல் கி.பி. 29-ல் இஸ்ரவேலரின் பிரபுவாகிய மேசியா வந்தது வரையுள்ள காலமாகும். 70 தாவது வாரத்தின் மத்தியில் இஸ்ரவேலரின் மேசியா சங்கரிக்கப்பட்டார். ஆனால் தமக்காக அல்ல (வச. 26) கி.பி. 29 ஆரம்பத்திலிருந்து $3\frac{1}{2}$ வருஷங்களுக்குப் பின் கி.பி. 33 இளவேனீர் (வசந்த) காலத்தில் இஸ்ரவேலரின் மேசியா சிலுவையில் அறையப்பட்டார். இஸ்ரவேலர் தங்கள் மேசியாவைப் புறக்கணித்ததால் ஒரு ஜாதியாக அவர்களுக்கு இருந்த தேவ தயவு கி.பி. 33-ல் முடிவடைந்தது. என்றாலும் தனிப்பட்ட யூதருக்கு 70 தாவது வார முடிவு வரை கி.பி. 36 வரை தயவு கிடைத்து வந்தது. அது முதல் தேவ தயவு புறஜாதியாருக்குப் போக ஆரம்பித்தது. தேவ தயவு பெற்ற முதல் புற ஜாதியான் கொர்நேலியு (அப். 10) நகரத்தின் அழிவும் பரிசுத்தஸ்தலத்தின் அழிவும் முன்னறி விக்கப்பட்டிருக்கிறது. (வச. 26, 27) இது கி.பி. 70-73-ல் ரோம அரசன் தீத்து சேனையுடன் வந்து எருசலேமை அழித்ததில் நிறைவேறிற்று. அந்நேரத்தில் யூதரின் மகா உபத்திரவமும் அதனால் அவர்கள் எல்லா ஜாதிகளுக்குள்ளும் சிதறிப் போனதும் லூக். 21: 20-24-ல் முன்னறிவிக்கப்பட்டிருக் கிறது.

சுவிசேஷ யுகம் முழுவதும் பல நாடுகளில் அவர்கள் சிதறடிக்கப்பட்டது மற்றும் பல தீர்க்கதரிசனங்களிலும் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஏசா. 43 : 5. 6; எரே. 16 : 13-16; 23 : 7. 8; 29 : 14; 30 : 11; 32 : 37. அவர்கள் தேசமும் நகரங்களும் அழிக்கப்படுவதைப் பற்றி வேறு வேத வசனங்களும் முன்னறிவித்திருக்கின்றன. உதாரணமாக உபா. 29 : 22-24, 27; ஏசா.17 : 4-6; எரே. 4 : 20. 26-28; 12 : 4, 7, 10-13; 19 : 8; ஆமோ. 3 : 14; 5 : 3, 5; 7 : 8, 9; மீகா 1 : 6; மத். 11 : 20-24.

## இஸ்ரவேலர் தேவ தயவுக்கும் சுயதேசத்துக்கும் திரும்ப வருவது

இஸ்ரவேலர் மேலும் அவர்கள் தேசத்தின் மேலும் நகரங்கள் பட்டணங்கள் மேலும் உள்ள வெறுப்பையும் துன்பத்தையும் கூறிய எல்லா தீர்க்கத் தரிசனங்களின் சம்பந்தமாகவும், இஸ்ரவேலரை தமது தயவுக்கும் முன்னிலும் செழிப்பாக இருக்கும் பரிசுத்த நாட்டுக்கும் திரும்பக் கொண்டு வரவும், பாழாய்ப் போன அவர்களின் நகரங்களையும் பட்டணங்களையும் திரும்பக் கட்டவும் தேவன் வாக்களிக்கிறார் என்பது கவனிக்கப்பட வேண்டும். இவ்விதமாய் தேவன் எக்காலத்துக்கும் அவர்களைக் கைவிட்டு விடவில்லை இந்தத் தீர்க்கத் தரிசனங்களின் நிறைவேறுதலை நமது கண்களால் பார்க்கிறோம். கீழ்க்கண்டவை அவர்கள் தேவ தயவுக்குத் திரும்ப வருவதைப் பற்றிக் கூறும் வசனங்களாகும். லேவி. 26 : 40-45; சங். 102 : 13-17; ஏசா. 40 : 1, 2; எசே. 16 : 60-63; ரோம. 11 : 25-27. அவர்கள் நியாயப் பிரமாண உடன்படிக்கையை மீறியதால் ஓரளவு வெறுப்புக் குள்ளானார்கள். (அவர்களின் அக்கிரமங்களின் நிமித்தம் சங். 107 : 17) மேசியாவைப் புறக்கணித்ததால் முற்றிலும் தயவை இழந்தார்கள் (தங்கள் பாதக மார்க்கத்தால் சங். 107 : 17) புற ஜாதியாரின் நிறைவு உண்டாகும் வரைக்கும் (புற ஜாதியாரில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தொகை) தேவ தயவு அவர்களுக்குக் கிடையாதென்று பரி.பவுல் கூறுகிறார். (ரோம. 11 : 25) தெரிந்து கொள்ளப்பட்ட புற ஜாதியாரின் நிறைவான தொகை கிறிஸ்துவின் சரீர அங்கமாவதில் இரு வகையாக நிறைவேறுதல்கள் இருந்தன. தகுதியைச் சோதித்தறியும் காலம் ஒன்று. அது 1878 பஸ்காவில் நடைபெற்றது. இறுதியாக ஒன்று 1914 அக்டோபரில் நடைபெற்றது. அப்படியிருப்பதால் சுவிசேஷயுக தெரிந்தெடுப்பு நடைபெறுமளவும் இஸ்ரவேலர் குருட்டாட்டத் திலிருக்க வேண்டும் கி.பி. 33 நீசான் 10-ல் கிறிஸ்து எருசலேமுக்குள் பிரவேசித்த போது (லூக். 19 : 42) அவர்களுடைய குருட்டாட்டமுள்ள ஜனங்களாயிருப்பதாக இயேசுவானவர் சொன்னார் (மத். 23 : 37-39) ஆதலின் கிறிஸ்து எருசலேமுக்குள் பிரவேசித்தது முதல் அவர்களின் குருட்டாட்டம் ஆரம்பமானது. சகரி. 9 : 9-12-ன்படி சகரியா இரட்டிப்பென்று கூறுவது ஆரம்பமாயிற்று. அவர்களின் தண்டனை எவ்வளவு காலம் இருக்குமென்று எரேமியா (எரே. 16 : 18) கூறுகிறார். அவரும் இரட்டிப்பான காலம் என்றே கூறுகிறார். அவளுடைய இரட்சிப்பு என்று அழைக்கப்படுகிற குறிக்கப்பட்ட காலம் வரை அவர்கள் துன்பப்பட்டபின் தேவ தயவு அவர்களுக்கு திரும்பக் கிடைக்குமென்றும் அதன் பலனாக அவர்கள் ஆறுதலடைவார்களென்றும் ஏசா. 40 : 2 கூறுகிறது.

## இஸ்ரவேலரின் இரட்டிப்பும் (Kephel) அதைத் திரும்ப அடைதலும் (Mishneh)

ஒன்று திரட்டிப் பார்த்தால் சுவிசேஷ யுகம் முழுவதிலும் புறஜாதியாரில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தொகை பூர்த்தியாகிற வரை அவர்கள் தேவ தயவுக்குப் புறம் பாயிருப்பார்களென்று (அவர்களின் இரட்டிப்பு முடிகிற வரை) ரோம. 11 : 25 கூறுகிறது. ஏசா. 40 : 2-ல் இரட்டிப்பு என்று மொழிபெயர்த்திருக்கிற Kephel என்ற எபிரெய வார்த்தை ஒரு பக்கத்தை மத்தியில் இரண்டாக மடித்ததென்று என பொருள்படும். சகரி. 9 : 12-லும் எரே. 16 : 18-லும் உபயோ கிக்கப்பட்டிருக்கிற வார்த்தை Mishneh என்பதாகும். அது அதே அளவான காலத்தையும் பொதுக் குணத்தையும் திருப்புதல் என்று பொருள்படும். இரட்டிப்பு அதன் இரண்டாவது பகுதியாக கி.பி. 33 நீசான் 10-ல் இயேசுவானவர் எருசலேமுக்குள் பிரவேசித்த நாளில் ஆரம்பித்ததென்று சகரி. 9 : 12 கூறுகிறது. வேதாகம காலக் கணக்குப்படி மாம்ச இஸ்ரவேலரின் தலைமையாகிய யாக்கோபு மரித்து முற்பிதாக்கள் யுகத் திலிருந்து வேறுபட்டதான யூதயுகம் கி.மு. 1813 ஏப்ரலில் ஆரம்பமானது. ஆவிக்குரிய இஸ்ரவேலரின் தலைமையான இயேசுவானவர் யாக்கோபின் மரணத்திலிருந்து சரியாக 1845 வருஷங்களுக்குப் பின் கி.பி. 33 ஏப்ரலில் மரித்தார். இயேசுவானவரின் மரணத்திலிருந்து சரியாக 1845 வருஷங்களுக்குப் பின் கி.பி. 1878 ஏப்ரலில் தேவ தயவு

இஸ்ரவேலருக்குத் திரும்பக் கிடைத்ததற்கான முதல் இரண்டு வெளிப்பாடுகள் : (1) பிரான்ஸ் டிலிட்ஸ் என்பவர் தமது எபிரேய புதிய ஏற்பாட்டை விநியோகம் செய்வதற்கு ஆயத்தமானார். (2) ஐரோப்பிய கூட்டமைப்பு (Concert) பெர்லின் மகாநாட்டைக் கூட்ட ஆயத்தம் செய்தது. அது டிலிட்ஸ் தமது எபிரேய புதிய ஏற்பாட்டை விநியோகம் செய்ய ஆரம்பித்த அதே காலமாகிய 1878 ஜூன் மாதத்தில் பலஸ்தீனாவில் வசித்த யூதர்களுக் கிருந்த கட்டுப்பாட்டைத் தளர்த்தவும் வெளியிலுள்ள யூதர் பலஸ்தீனாவுக்கு வர அனுமதியளிக்கவும் உத்தரவு பிறப்பித்தது. இவ்வாறு இயேசுவானவரின் மரணத்துக்கு 1845 வருஷங்களுக்குப்பின் 1878-ல் இரட்டிப்பின் இரண்டாவது பகுதி முடிந்ததென்று நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. இயேசுவானவரின் மரணத்துக்கு 1845 வருஷங்களுக்கு முன் யாக்கோபு மரித்து யூதயுகம் ஆரம்பமானதால் இரட்டிப்பின் முதல் பகுதி யாக்கோபின் மரணத்தில் ஆரம்பித்து யூதயுகம் முழுவதும் இருந்து இயேசுவானவரின் மரணத்தோடு முடிந்தது. வேறு விதமாகக் கூறினால் அவர்கள் ஒரு ஜாதியாக எவ்வளவு காலம் தேவ தயவிலிருந்தார்களோ அவ்வளவு காலம் தேவ தயவை இழந்திருக்க வேண்டும். ஆதலின் யூதயுகமும் சுவிசேஷ யுகமும் அவற்றின் முதல் முடிவில் ஒரே அளவானவைகள். தனித்தனியாகப் பார்த்தால் கி.பி. 33-க்கு 36 $^1/_2$ வருஷங்களுக்குப்பின் யூத அறுப்பு முடிந்தபோது கி.பி. 69-ல் எருசலேம் படைகளால் சூழப்பட்டது போல் 1878 ஏப்ரலுக்கு 36 $^1/_2$ வருஷங்களுக்குப்பின் சுவிசேஷ யுக அறுப்பும், கி.மு. 607 அக்டோபரிலிருந்து இஸ்ரவேலரின் ஏழு காலங்களான 2520 வருஷங்களும் முடிந்தபோது 1914 அக்டோபரில் உலக யுத்தத்தில் அகழிப் போர் (கிறிஸ்தவ நாடுகளின் அழிவுக்கு ஆரம்பமான) நடைபெற்றது.

## நிறைவேறுதலின் ஆரம்பம்

ஆகையால் இஸ்ரவேலரின் குருட்டாட்டமும் இயேசுவானவரைப் பற்றிய அவர்களின் தப்பெண்ணமும் (ரோம. 11 : 25) அகன்று வருவதைக் காண்கிறோம். நாம் காண்கிறது என்ன? 1878 ஏப்ரல் முதல் நூற்றுக்கணக்கான வருஷங்களாக இருந்த இஸ்ரவேலரின் குருட்டாட்டமும் தப்பெண்ணமும் மெதுவாக படிப்படியாக மறைந்து வருகிறது. உதாரணமாக இப்போது அநேக யூதர் இயேசுவானவரைப் பற்றி நல்லெண்ணம் உள்ளவர்களாய் அவர் இஸ்ரவேலரின் தீர்க்கத்தரிசிகள் அனைவரிலும் மேலானவரென்றும்; பரிசுத்த மானவரென்றும் ஆச்சரியமான சீர்திருத்தவாதியென்றும் சொல்லுகிறார்கள். உதாரணமாக அமெரிக்காவில் மிகப் பிரசித்திபெற்ற ரபியும் யூத தலைவருமான ஸ்டீபன் ஒய்ஸ் என்பவர் தமது பிரசங்கங்களில் சுவிசேஷங்களைத் தங்கள் வீடுகளில் வரவேற்று அதைக் கற்றுவரும்படி அன்புடன் தமது சபையாரைக் கேட்டுக்கொள்கிறார். மற்றும் பல யூத பிரசங்க பீடங்களிலும் இதே மனோபாவம் இருந்து வருகிறது. மேலும் சில யூத எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை மெச்சி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக எபிரேய கல்விமானும் திறமையுள்ள யூதருமான டாக்டர் ஜோசப் கிளாஸ்னர் என்பவர் கிறிஸ்துவை மேசியாவென்று ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவருடைய சரித்திரத்தை மிகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். ஒரே விதமான தலைவர்கள் அதே விதமாய் நடத்தப்படுகிறவர்களை விரும்புகிறார்கள். டிலிட்ஸ் என்பவரின் புதிய ஏற்பாட்டு எபிரேய மொழி பெயர்ப்பும், கின்ஸ்பர்க் என்பவரின் மொழி பெயர்ப்பும், ஈடிஷ் (Yiddish) மொழி பெயர்ப்பும் யூதர்களுக்குள் அதிகமாக வாசிக்கப்பட்டு இஸ்ரவேலரின் குருட்டாட்டத்தையும் தப்பெண்ணத்தையும் மெதுவாக ஆனால் நிச்சயமாக அகற்றி வருகிறது. அவர்களின் சுவிசேஷயுக குருட்டாட்டத்திலும் தப்பெண்ணத்திலுமிருந்து அவர்கள் பூரணமாக விடுதலையடைவதை யாக்கோபின் உபத்திரவம் முடிவடைவதற்கு முன் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இப்போது நடந்து வருகிற வேலை அந்த மகிமையான பலனுக்கு வழியை ஆயத்தம் செய்கிறது.

தேவனின் தயவு வேறுவிதமாக இஸ்ரவேலருக்குத் திரும்ப வருவது அவர்கள் தங்கள் பரிசுத்த பூமிக்குத் திரும்பி வருவதும் தேவனின் ஆசீர்வாதத்தினால் அந்நாடு செழிப் படைந்திருப்பதுமாகும். இது பல வேத வசனங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றை இங்கே கூறுவோம். எரே. 16 : 14-18; 30 : 4-8, 18-22; 31 : 4-14, 21, 23-25, 27, 28, 35-40; 32 : 37-44; 33 : 7, 10, 11; எசே. 36 : 1-15, 24-38; 37 : 1-28 ஓசி. 3 : 4, 5. இந்த வேத வசனங்கள் அவர்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வந்ததைக் காட்டுகிறதில்லை. ஏனெனில் அவை வடதேசத் திலிருந்தும் (பலஸ்தீனாவுக்கு வடக்கில் ரஷ்யா இருக்கிறது. பாபிலோன் பலஸ்தீனாவுக்குக் கிழக்கில் இருக்கிறது) அவர்களும் அவர்கள் பிதாக்களும் அறியாத நாடுகளாகிய அவர்கள் சிதறியிருந்த நாடுகளிலிருந்து திரும்பி வருவதாகக் கூறுகின்றன. (எரே. 15 : 4, 14; 16 : 13) ஆபிரகாம் கல்தேய பாபிலோனிலிருந்து வந்தான். பாபிலோன் பல மாகாணங்கள் அடங்கியதாக இருந்தாலும் அது ஒரு தேசமாக இருந்தது. ஆகையால் அவர்கள் திரும்பி வருவதாக இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருப்பது அவர்கள் இரண்டாவது சிதறடிக்கப்பட்ட நாடுகளிலிருந்து திரும்புவதாகும். 1878 ஜூன் மாதத்தில் நடைபெற்ற பெர்லின் காங்கிரசுக்கு சிறிது காலத்துக்குப் பின் இஸ்ரவேலர் பலஸ்தீனாவுக்குத் திரும்ப வருவதற்கும் அங்கு தங்குவதற்குமிருந்த தடை நீக்கப்பட்டது. முதலில் கொஞ்சப் பேராகவும் பின் அநேகராகவும் திரும்பிவர ஆரம்பித்தனர். இப்போது 17,00,000-க்கு அதிகமான யூதர் அங்கு வசிக்கிறார்கள். இப்போது அந்த நாடு சுதந்தர அரசாங்கத்தின் கீழ் ஆச்சரியமான விதமாக செழிப்படைந்து வருகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டின் அற்புதமாக எல்லா நாடுகளுக்கும் மேலானதாக இருப்பது அந்த ஒரு நாடுதான். தீர்க்கத் தரிசனத்தில் கூறப்பட்டபடி தேவன் தமது இஸ்ரவேலருக்கு உதவி செய்ய வந்து சீயோனுக்குத் தமது இரக்கத்தைக் காட்டுகிறார். அவளுக்குத் தயை செய்யும் காலம் வந்துவிட்டது. விரைவில் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். சீக்கிரத்தில் புறஜாதியார் கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். பூமியின் ராஜாக்க ளெல்லாரும் அவருடைய மகிமையைக் காண்பார்கள். ஏனெனில் கர்த்தர் சீயோனை எடுப்பித்துக் கட்டும்போது அவர் தமது மகிமையில் தோன்றுவார். ‘‘**பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்**’’ (எண். 14 : 21) ‘‘**அக்காலத்திலே எருசலேமை கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள். சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதனிடமாகச் சேர்வார்கள். அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்**’’. எரே. 3 : 17.

***

# இஸ்ரவேலர் திரும்ப சேர்க்கப்படுதல்
## The Regathering of Israel

இக்காலத்தில் மகா ஆச்சரியமானதும் குறிப்பிடத் தக்கதுமான தீர்க்கதரிசன நிறைவேறுதல்களில் ஒன்று இஸ்ரவேலரை அவர்களின் தாய்நாட்டில் திரும்பக் கூட்டிச் சேர்ப்பதாகும். வேத வசனங்களின்படி அது தேவராஜ்யம் அதைத் தொடர்ந்து மனுக்குலம் முழுவதற்கும் வரும் ஆசீர்வாதத்தோடு சமீபித்திருக்கிறது என்பதைக் குறித்துக் காட்டும் அத்தாட்சிகளில் ஒன்றாகும். (ஏசா. 2 : 2-4; மீகா. 4 : 1-4; லூக். 21 : 29-31; ரோம. 11 : 12, 15) யூதரும் புற ஜாதியாரும் இந்த ராஜ்ஜிய ஸ்தாபிதத்தை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். (தானி. 2 : 35, 44; 7 : 13, 14, 18, 22, 27; மத். 6 : 10) ஆகையால் இங்கு சொல்லப்பட்டபடி இஸ்ரவேலர் தங்கள் தாய்நாடு திரும்புவதின் சம்பந்தமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறுவது யாவருக்கும் மிகுந்த விருப்பமானதாகும்.

### தயவு திரும்பக் கிடைக்கும் திருப்பம்

1878 ஜூன் மாதத்தில், அப்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த யூதனான டிஸ்ரயில் என்பவரின் தலைமையில் கூடிய பெர்லின் காங்கிரஸ் கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பால் இஸ்ரவேலர் பலஸ்தீனாவில் குடியேறுவதற்கிருந்த தடைகள் நீக்கப்பட்டு அவர்கள் அங்கு குடியேற உரிமையளிக்கப்படவேண்டும் என்பது சர்வதேச சட்டமாக்கப்பட்டது, அக்கூட்டத்தில்தான் இங்கிலாந்து துருக்கி யின் ஆசிய மாகாணங்களின் பாதுகாப்பு நாடாக ஏற்படுத்தப் பட்டது. அம்மாகாணங்களில் பலஸ்தீனாவும் ஒன்றாகும். துருக்கி அரசாங்கம் அயல்நாட்டினர் சம்பந்தமான சட்டங்களை சீர்திருத்தியது. அதனால் அப்போது பலஸ்தீனாவில் குடியிருந்த யூதர்களின் நிலமை சீர்திருத்தியதோடு மற்ற யூதரும் சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ளும் சிலாக்கியத்துடன் அங்கு குடியேற ஒருவாறு வழிதிறக்கப்பட்டது. அதற்கு முன் அங்குள்ள யூதர் முகமதிய ஆட்சியாளரால் அடிக்கப்பட்டு உதைக்கப்பட்டு ஏசப்பட்ட ஒரு நாயாக இருந்தனர். ஜீவனத் துக்கு வேண்டிய சாதாரண சிலாக்கியங்களும் அவனுக்கு மறுக்கப்பட்டது. அவனுடைய பரிசுத்த நாட்டில் கடந்த காலத்தைப் பற்றிய ஞாபகங்களோடும் அவனது பிற்காலத் தைப் பற்றிய வாக்குத்தத்தங்களோடும் இவ்வாறு துன்பப் பட்டனர். ஆயினும் 1878-ம் வருஷம் மாம்ச இஸ்ரவேலருக்கு தயவு திரும்பக்கிடைக்கும் திருப்பமாக மாத்திரம் இருந்தது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தயவுக்கு உயர்வதும் தங்கள் நாட்டுக்குத் திரும்புவதும் அவர்களின் விழுதல் படிப்படியாக நடைபெற்றது போல படிப்படியாக நடைபெறுவதாகும்.

### எரேமியா 16 : 14–16 பரிசீலனை

எரே. 16 : 14-16 வசனங்கள் இஸ்ரவேலர் பரிசுத்த நாட்டுக்குத் திரும்பி வருவதைப் பற்றித் தெளிவாக விவரித்துக் கூறும் வேத வசனமாயிருப்பதால் இந்த சந்தர்ப்பத்தில் அதைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். அவ்வசனங்களை எடுத்துக் காட்டுவோம். ''இதோ நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு இனிமேல் சத்தியம் பண்ணாமல், இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லாத் தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின **கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள்: நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன் அவர்கள் இவர்களைப் பிடிப்பார்கள். அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன் இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லா குன்றுகளிலும், கன்மலை வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்**''. ''வடதேசம்'' என்பது ரஷ்யா. அங்கு சமீபகாலம் வரை கிட்டத்தட்ட இஸ்ரவேலரில் பாதிப்பேர் வசித்து வந்தனர். ''எல்லாத் தேசங்கள்'' என்பது அவர்கள் சிதறியிருந்த மற்ற நாடுகளைக் காட்டுகிறது. விசேஷமாக போலந்து, ஜெர்மனி, ருமேனியா, ஹங்கேரி முதலிய ஐரோப்பிய நாடுகளாகும். சுவிசேஷயுகத்தில் இஸ்ரவேலர் அங்கு சிதறிப் போயினர். இந்த நாடுகளிலிருந்து அவர்களை தங்கள் சுய நாட்டுக்குத் திரும்பக் கொண்டுவருவதாக தேவன் வாக்களிக்கிறார்.

### மீன் பிடிக்கிறவர்கள்

1878 முதல் எரே. 16 : 16-ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் படி அடையாளமான மீனாகிய இஸ்ரவேலரை பலஸ்தீனாவுக்கு இழுப்பதற்காக சீயோனிசம் என்ற கவர்ச்சிகரமான இரையோடு தேவன் '' மீன் பிடிக்கிறவர்களை'' அனுப்பிக் கொண்டிருக்கிறார். மீன் பிடிக்கிறவர்கள் என்னப்பட்ட இவர்களில் ஒரு பகுதி இஸ்ரவேலர் திரும்பி வருவதற்கு அரசாங்க சம்பந்தமாக உதவி செய்த அரசியல் அதிகாரிகளாகும். ஒரு பகுதி துன்பப்படுத்தபடபட்ட தங்கள் சகோதரரை பலஸ்தீனாவுக்குப் போகும்படி தூண்டிய கிளர்ச்சிகாரரான இஸ்ரவேலராகும். ஒரு பகுதி வேதாகம சீயோனிசத்தை அறிவித்துவரும் ஆவிக்குரிய இஸ்ரவேலராகும் (கிறிஸ்தவர்கள்). 1882-ல் டாக்டர் தியடோர் ஹெர்சல் என்பவரின் முன்னோடியான லியோபின்ஸ்கர் என்பவர் பெர்லின் காங்கிரஸ் கூட்டத்தால் ஏற்பட்ட எதிர்காலப் பலனால் தைரியமூட்டப்பட்டு ஏசா. 40 : 1, 2-ல் சொல்லப்பட்ட உண்மையான ஆறுதல் என்ன என்பது பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார். விலின்பிளம், லெவெண்டா, ரல்வ் முதலிய பல பிரபல இஸ்ரவேலர் இந்த ஆறுதலின் செய்தியை உலகமெங்கும் அறிவிப்பதற்கு அவருடன் சேர்ந்து கொண்டனர். 1896-ல் டாக்டர் ஹெர்சில் என்பவர் யூத அரசாங்கம் (Jewish State) என்ற தமது புத்தகத்தை வெளியிட்டார். அது சீயோனிசம் என்ற பதத்தின் குறுகிய கருத்தில் சீயோனிசம் என்ற கிளர்ச்சியை எழுப்பிவிட்டது. எல்லா யூதரும் 1878 இளவேனிர் (வசந்த) காலமுதல் இந்த ஆறுதலைப் பெற்று வருகிறார்கள்; அது நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறது.

### வேட்டைக்காரர்

எல்லா மலைகளிலிருந்தும் (ராஜ்யங்கள்) எல்லா குன்றுகளிலிருந்தும் (குறைந்த உயரமுள்ளது, குறைந்த எதேச்சதிகார அரசாங்கங்கள், பொது ஜன அல்லது குறை ஏகாதிபத்திய நாடுகள்) கன்மலை வெடிப்புகளிலிருந்தும் (மனித சமுதாயத்தின் பலம் பொருந்திய ரகசிய மறைவிடங்கள். அவர்கள் சிதறடிக்கப்பட்ட காலத்தில் அவ்விடங்களில் பாதுகாவல் அடைந்திருக்கிறார்கள்.) யூதர்களை ''வேட்டைக்

காரர்'' வேட்டையாடுவார்களென்று எரே. 16 : 16 கூறுகிறது. அழிக்கும் நோக்கத்துடன் வேட்டைக்காரன் ஒன்றைப் பின் தொடருகிறான். இங்கு வேட்டைக்காரர் என்பது இஸ்ரவேலரைத் துன்புறுத்தி கொள்ளையிடுகிறவர்களைக் குறிப்பிடுகிறது. 1878-ல் ருமேனியாவிலும், கலீஷியாவிலும் விசேஷமாக ரஷ்யாவிலும் பயங்கர துன்புறுத்தல் நடைபெற்றது. அதனால் 1881-ல் (May Laws) என்ற மே சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதனால் ரஷ்யாவிலும் போலந்திலும் ருமேனியாவிலும் கலீஷியாவிலும் யூதர்கள் மிருகத்தனமாகத் தங்கள் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். அதைத் தொடர்ந்து பல வருஷங்களாக ஆயிரக்கணக்கான யூதர்கள் துன்புறுத்தப்பட்டு ஈவிரக்கமின்றி அநேகர் கொல்லப்பட்டனர். அநேகர் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஓடிப் போக வேண்டியதாயிற்று. 1903-ல் இஸ்ரவேல் படுகொலையில் 500-க்கு அதிகமான யூதர் கொல்லப்பட்டது, யூதர்கள் மற்ற நாடுகளில் புகலிடம் தேடிக் கொள்ளும்படி வேட்டைக்காரர் செய்த கொடிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். முதல் உலக யுத்தத்தில் (1914-1918) சத்துருக்களை எதிர்த்துச் சென்ற ரஷ்ய படைகளுக்குப் பாதுகாவல் போர்வையாக இருக்கும்படி ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் பிள்ளைகளு மான யூதர் படைகளுக்கு முன்னால் செல்லும்படி துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மற்றும் சில நாடுகளிலும் அப்படியே படை வீரர் இரக்கமற்றவர்களாய் இருந்திருக்கி றார்கள். போலந்தில் ஆயிரக்கணக்கான யூதர் எரிக்கப்பட்டனர். பெரியவர்களும் சிறியவர்களுமான யூதரை வைத்திய பரிசோதனைக்காக அறுத்ததும், சந்தான விருத்தியைத் தடுத்ததும், சொல்ல முடியாத பல கொடிய செயல்களைச் செய்ததும் விசேஷமாக இரண்டாவது உலக யுத்தத்தில் (1939-1945) ஹிட்லரும் அவனைச் சேர்ந்தவர்களும் பல்லாயிரக்கணக்கான யூதரை படுகொலை செய்ததும் பலர் நாட்டைவிட்டு ஓடவும் சிலர் பலஸ்தீனாவுக்குத் திரும்பவும் செய்தது. இவ்வாறு மனிதரின் கோபம் தமது மகிமையை விளங்கப் பண்ணும்படி தேவன் செய்கிறார். (சங். 76 : 10).

## திரும்பச் சேர்க்கப்படும் இஸ்ரவேலர் பன்னிரண்டு கோத்திரங்களிலும் உள்ளவர்கள்

இஸ்ரவேல் புத்திரரைத் திரும்ப ஒன்று சேர்ப்பதாக தேவன் அளித்த வாக்குத்தத்தத்தில் இரண்டு கோத்திரங் களிலுமிருந்து (வழக்கமாக யூதா கோத்திரம் என்றழைக்கப் பட்டது) வேறுபட்டதாக பத்துக் கோத்திரங்களையும் (சில வேளைகளில் இஸ்ரவேல் எப்ராயீம் என்றழைக்கப்பட்டவர்கள்) மாத்திரம் குறிப்பிடாமல் பன்னிரண்டு கோத்திரங்களையும் குறிப்பிட்டுச் சொன்னார். ஏனெனில் கி.பி. 33-ல் புறக்கணிக் கப்பட்ட வீட்டாரான ''**காணாமற்போன இஸ்ரவேல் வீட்டார்**'' என்பதின் பன்னிரண்டு கோத்திரங்களும் குறித்துக் காட்டப் படுகின்றன. (மத். 10 : 6) பன்னிரண்டு கோத்திரங்களும் சேர்ந்ததென்பது ஏசா. 11 : 11, 12-ல் தெளிவாகக் காட்டப் படுகிறது. அங்கு பத்துக் கோத்திரங்களும் இஸ்ரவேல் என்றும் இரண்டு கோத்திரங்கள் யூதா என்றும் தெளிவாகக் குறித்துக் காட்டப்படுகிறது. அக்காலத்திலே ஆண்டவர்... தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக் கொள்ள திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி (பாபிலோனின் சிறையிருப்பு முடிந்த போது முதல் தடவையாக அவர் செய்தது போல்) ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி இஸ்ரவேலரில் துரத்துண்ட வர்களைப் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். (இவை யாவும் 1878 முதல் நடைபெற்று வருகிறது. ஆனால் அதற்கு முன் நடைபெறவில்லை. ஏனெனில் சுவிசேஷயுகத்தில் சிதறடிக்கப்பட்டதற்கு முன் பன்னிரண்டு கோத்திரத்தாரும் பூமியின் நான்கு திசைகளிலும் சிதறடிக்கப்படவில்லை.)

எசேக்கியேல் 36 : 22, 24-லிலும் இஸ்ரவேல் என்ற பெயரால் பன்னிரண்டு கோத்திரங்களையும் தேவன் குறிப் பிடுகிறார். அவர் சொல்லுவதாவது ''**இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்...... நான் உங்களை புற ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து. உங்களை சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து உங்கள் சுய தேசத்திற்கு** (பலஸ்தீனாவுக்கு, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்துக்கு) **உங்களை கொண்டு வருவேன்....... என்று சொல் என்றார்.**'' இந்த திரும்பச் சேர்த்தல் தேவன் அவர்களை சிதறடித்திருந்த புற ஜாதியாரின் காலம் முடியுமுன் நடைபெற வேண்டும்''. (எரே. 30 : 10, 11; 46 : 27, 28) ''**நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து சுற்றிலு மிருந்து அவர்களைச் சேர்த்து அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப் பண்ணி அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரு ஜாதியாக்குவேன். ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார். அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை. அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை......... அதிலே என்றென்றைக்கும் குடியிருப் பார்கள்.**'' (எசே. 37 : 21, 22, 25).

## டாக்டர் தியோடர் ஹெர்ஸிலின் வேலை

1890-ல் டாக்டர் ஹெர்ஸில் (விசேஷமாக அவர் எழுதிய யூத ராஜ்யம் என்ற புத்தகத்தில்) என்பவர் துன்புறுத்தப் பட்ட யூதருக்கு பலஸ்தீனா சுயாதீனமான சொந்த நாடாகும் என்று முன்னறிந்து சொன்ன போது அது இந்த யுகத்தில் நிறைவேறும் நிகழ்ச்சியாகும் என்பதை சிலரே உணர்ந்தனர் அல்லது நம்பிக்கை கொண்டனர். அவர்கள் சீயோனுக்காக புலம்பி அதற்காகக் காத்திருந்தனர். பொதுவாக அவர்கள் அந் நாட்டுக்கு தேவனின் தயவு கிடைக்கும் காலம் உண்மையாகவே வந்து விட்டதென்பதை அறியவில்லை (சங். 102 : 13) சில விஷயங்களைத் தவிர தங்களுக்குக் குறிக்கப்பட்ட காலம் முடிந்ததென்பதையும் (ஏசா. 40 : 2) தங்கள் இரட்டிப்பு நிறைவேறிவிட்டதென்பதையும், தேவதயவு இஸ்ரவேலுக்கு மெதுவாக திரும்ப வந்து கொண்டிருக்கிறதென்பதையும் அவர்கள் உணரவில்லை. ஏழுகால தண்டனை என்ன என்ப தை அறியவும் (லேவி. 26 : 18, 21, 24, 28) புறஜாதியாரின் ராஜ்ய காலமாகிய புறஜாதியார் காலம் முடிந்துவிட்டது என்பதையும் அவர்கள் அறியவில்லை (லூக். 21 : 24) என்றாலும் ஹெர்ஸிலும் அவருடைய கூட்டாளிகளும் ஏன் என்பதை ஒருவரும் அறியாதிருக்க, மாம்ச இஸ்ரவேலரான தேவனின் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிடத்தில் தேசபக்தி யைப் புகுத்தவும், பல நாடுகளில் சீயோனிச சமூகங்களை அமைக்கவும், எதிர்நோக்கியிருக்கும் மிகுந்த அபிவிருத்தியை எல்லா யூதரும் அறிந்து அதில் உற்சாகம் கொள்ளவும் யூதரைக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். முதல் சர்வதேச சீயோனிஸ்ட் காங்கிரஸ் கூட்டம் 1897-ல் சுவிட்சர்லாந்திலுள்ள பேசேல் என்னுமிடத்தில் கூடியது. 1900-ல் அரசியல் சம்பந்த மான இந்த சீயோனிச கொள்கை பலரை பலஸ்தீனாவுக்குத் திரும்பும்படி தூண்டியது. சீயோனிசத்தை முன்னேறச் செய்ய ஹெர்சலின் இடைவிடா முயற்சி 1904-ல் அவரது மரணத்தால் சீயோனிச இயக்கம் ஸ்தம்பித்துவிட்டது. அதன் பிறகு அதில் அபிவிருத்தி சிலகாலம் வரை ஸ்திரமற்றதாக இருந்தது. 1909-ல் அதன் தலைவர்கள் அது ஆட்டம் கொடுப்பதைப் பார்த்து அது ஒழிந்து போகுமோ என்று பயந்தனர்.

## புதியதாக தைரியமூட்டப்பட்டது

ஆனால் சீயோனிசம் தோல்வியடைந்து போக வில்லை. ஏனெனில் அது சர்வ வல்லமையுள்ள தேவனால்

ஆதரிக்கப்பட்டு வந்தது. யூத ஜனங்களின் புறஜாதி நண்பரும் எபிரெய தீர்க்கத்தரிசனங்களை ஆழ்ந்து படித்தவருமான சார்லஸ் T. ரசல் போதகர் சோர்வடைந்த சீயோனிஸ்ட் இயக்கத்தை எழுப்புதலடையும்படி செய்ய உபயோகிக்கப் பட்டார். ஹெர்ஸிலைப் பற்றியும் (Herzl) சியோனிஸ (Zionism) இயக்கத்தைப் பற்றியும் யூத உலகம் கேள்விபடுவதற்கு முன்பே 1889-ல் ரசல் போதகர் காலம் சமீபத்திருக்கிறது (The Time is At Hand) என்ற தமது புஸ்தகத்தை வெளியிட்டார். அதில் ஏழு காலங்களின் முடிவு அல்லது புறஜாதியார் கால முடிவு 1914-ல் என்பதைக் காட்டும் தீர்க்கதரிசனத்தைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். தேவனின் தெரிந்து கொள்ளப் பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு வரும் முக்கியமான ஒரு மாறுதலை ''உமது ராஜ்யம் வருவதாக'' (Thy Kingdom Come) என்ற தமது புஸ்தகத்தில் (1891-ல் அச்சிடப்பட்டது) குறிப் பிட்டிருக்கிறார். அப்புஸ்தகத்தில் ''இஸ்ரவேலர் திரும்ப வருதல் (The Restoration of Israel) என்ற ஒரு நீண்ட அதிகாரத்தையும் சேர்த்திருக்கிறார் (அந்த இரு புஸ்தகங்களும் இப்போதும் கிடைக்கும்). 1910-ல் ஓவர் லேண்ட் என்ற மாதாந்திரப் பத்திரிக்கையில் (Overland Monthly) தேவனின் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களைப் பற்றி ரசல் போதகர் எழுதிய 12 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. அது யூத ஜனங்களுக்குள் மிகுந்த ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் எழுப்பியது.

## 1910–ல் ஹிப்போட்ரோமில் நடந்த கூட்டம்

1910-ல் பலஸ்தீனாவில் ரசல் போதகர் சீயோனிஸ்ட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் லெவி என்பவருடன் சிநேகமாகி, எருசலேமில் கூடிய யூதர்களுக்கு கவர்ச்சிகரமான சொற்பொழிவாற்றி திரும்பி வந்தபின், அமெரிக்காவிலுள்ள சீயோனிஸ்ட் கூட்டத்தினரில் சிலர் டாக்டர் லெவியின் ஆதரவில் நியூயார்க்கிலுள்ள ஹிப்போட்ரோமில் கூடிய யூத கூட்டத்தினருக்கு சொற்பொழிவாற்றுமாறு அழைத்தனர். அவர்களுடைய அழைப்புக் கடிதத்தை எடுத்துக் காட்டுகிறோம்.

C.T.ரசல் போதகர், நியுயார்க், புருக்கிலின் N.Y.
செப்டம்பர் 20, 1910

அன்பார்ந்த ஐயா : கடந்த பல வருஷங்களாக யூத ஜனங்களின் மேலுள்ள தங்கள் அனுதாபமுள்ள ஆர்வம் எங்கள் முன்னின்று அகலவில்லை. கிறிஸ்தவ மதத்தின் பெயரால் எங்கள் ஜாதிக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைத் தாங்கள் கண்டித்ததால், தாங்கள் எங்களுடைய உண்மை யுள்ள நண்பன் என்று நம்புகிறோம். ''எருசலேமும் யூதரின் நம்பிக்கைகளும்''என்பது பற்றிய தங்கள் சொற்பொழிவு எங்கள் ஜனங்களில் பலருடைய மனதைக் கவர்கிறது. என் றாலும் சிறிது காலமாக ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஒரு யூதனை கிறிஸ்தவனாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லாமல், யூதனாக ஒரு யூதனிடத்தில் சிரத்தையுள்ளவராக இருக்கக் கூடுமா என்று நாங்கள் சந்தேகம் கொண்டோம். இந்த எண்ணத்தினாலேயே எங்களில் சிலர் எங்கள் ஜனங்களின் மேலுள்ள தங்கள் அக்கறையின் இயல்பைப் பற்றி பொதுக் கூட்டத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டனர். தாங்கள் ஆற்றிய சொற்பொழிவு மிக திருப்திகரமாயிருந்ததென்பதைத் தாங்கள் அறிய விரும்புகிறோம். அதில் யூதர்கள் கிறிஸ்தவர்களாகி ஏதாவது ஒரு பிரிவில் அல்லது புரட்டஸ்டாண்டு அல்லது கத்தோலிக்க பிரிவுகளில் சேரவேண்டுமென்று தூண்டவில்லை யென்று எங்களுக்கு உறுதிகூறியிருக்கிறீர்கள். அந்த சொற் பொழிவு யூத பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாங்கள் ஒரு ஜாதியாக தங்களைப் பற்றி பயப்பட வேண்டியதில்லையென்று உணர்கிறோம். அதற்கு மாறாக எங்கள் ஜனங்களின் மேலுள்ள தங்கள் சிரத்தையின் அஸ்திவாரம் எங்கள் நியாயப் பிரமாண அத்தாட்சிகளிலும் எங்கள் தீர்க்கத்தரிசனங்களின் செய்திகளிலும் காட்டப்பட்டிருப் பதாகக் கூறியிருக்கிறீர்கள். கிறிஸ்தவர்களுக்கு உரியதல்லாத தும் யூதர்களுக்கு உரியதுமான தீர்க்கத்தரிசனங்கள், இன்னும் நிறைவேறாததுமான தீர்க்கத்தரிசனங்கள் இன்றும் இருக்கிற தென்றும் தாங்கள் ஆராய்ந்து தந்திருக்கிறபடி யூத ஜாதி மகிழ்ச் சியடையும்படி அந்த தீர்க்கதரிசன நிறைவேறுதல் நெருங்கிக் கொண்டிருக்கிறதென்றும் எங்கள் மூலமாக அது உலகத் தாருக்கும் செல்லக்கூடியதென்றும் ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஒப்புக் கொள்வது எங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிற தென்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

ரசல் போதகரே, இந்தக் காரியங்கள் யூதரின் திரள் கூட்ட கமிட்டியை அமைக்கவும் அந்த பொதுக் கூட்டத்தில் விசேஷமாக எமது ஜனங்களுக்கு சொற்பொழிவாற்றவும் தங்களைக் கேட்டுக் கொள்ளும்படி எங்களைத் தூண்டியது. தாங்கள் இந்த அழைப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டால் தாங்கள் பேச வேண்டிய பொருள் எது என்பதை நாங்கள் குறிப்பிட எங்களுக்கு அனுமதியுங்கள். அது பொது ஜனங் களுக்கும் விசேஷமாக யூதர்களுக்கும் அதாவது தீர்க்கதரிசனத் திலிருக்கும் சீயோனிசத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அதிக விருப்பமாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். கூட்டத்தின் சம்பந்தமாக அக்டோபர் மாதம் 9-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடத்தலாமென்று எண்ணுகிறோம். அத்தேதிக்கு நியூயார்க்கிலுள்ள மிகப் பெரிதும் அழகானதுமான மண்டபமாகிய ஹிப்போடுரோம் கட்டிடத்தை கூட்டத்துக்கு ஒழுங்கு செய்திருக்கிறோம். இந்தத் தேதியும் இந்த இடமும் தங்களுக்குப் பிடித்தமாயிருக்குமென்று நம்புகிறோம். மிகுந்த அக்கறையுள்ள திரளான எபிரேயக் கூட்டமும் பொது மக்களிலிருந்து வரக்கூடியவர்களும் வருவார்களென்று உறுதி கூறுகிறோம். தங்களிடமிருந்து சீக்கிரம் பதிலறிய விரும்பு கிறோம் செலவை நாங்களே ஏற்றுக் கொள்வோம்.

மரியாதை நிறைந்த உங்களுடைய
யூத பெருங்கூட்டத்தினர் கமிட்டி

## மிக உபயோகமான கூட்டம்

4000 பேருக்கும் அதிகமான யூத பிரதிநிதிகள் ஹிப்போடுரோமில் நடந்த கூட்டத்துக்கு ஆஜராகி அவர்கள் வழக்கத்துக்கு மாறாக தங்களுக்குச் சொந்தமான எபிரேய தீர்க்கத்தரிசனங்களைப் பற்றி ஒரு புறஜாதியான் சொற்பொழி வாற்றுவதைக் கேட்டனர். ரசல் போதகர் தமது பிரசங்கத்தில் தாவீதின் வம்சத்தில் வந்த கடைசி அரசனான சிதேக்கியா அடையாளமான தேவனின் ராஜ்யத்தின் சிங்காசனத் திலிருந்து நீக்கப்பட்டானென்றும், அப்பொழுது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் அவனைத் தோற்கடித்து தேசத்தைப் பாழாக்கினாரென்றும், பாபிலோனிலிருந்து ஆரம்பமான புறஜாதி ராஜ்யம் (தானி. 2) இஸ்ரவேலர் புறக்கணிக்கப் பட்டிருந்த காலத்தில் புறஜாதியாருக்கு குத்தகைக்கு விடப் பட்டிருந்ததென்றும், அது உரிமைக்காரரான மேசியா வந்து (எசே. 21 : 25-27) பூமியில் தேவ ராஜ்யத்தை ஸ்தாபிக் கிறவரையில் நீடித்திருக்கும் என்றும், புற ஜாதியார் காலம் ஏழு காலங்களென்று தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப்பட்டிருக் கிறதென்றும், வேதாகமத்தில் வேறு இடத்தில் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறதற்கு இசைவாக 7 x 360 = 2520 வருஷங் களைக் காட்டுகிறதென்றும், அது சிதேக்கியா நீக்கப்பட்டதில் ஆரம்பித்து 1914 வரை இருக்கிறதென்றும், அப்போது அது மகா உபத்திரவ காலத்தோடு முடிவடையுமென்றும், தேவனின் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலரின்

மத்தியில் தேவராஜ்ய ஸ்தாபிதத்துக்கு அது ஆயத்தமென்றும், இஸ்ரவேலர் மனிதனின் மத்தியில் அதன் முக்கிய பிரதிநிதி களாகவும் கையாட்களாகவும் இருப்பார்களென்றும் ஆபிர காமுக்கு அளித்த வாக்குத்தத்தத்தின்படி (ஆதி. 22 : 16-18) அவர்கள் மூலம் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்க ளென்றும் சொன்னார். ரசல் போதகரின் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் சந்தேகத்துடன் அமைதியாக இருந்த பலர் தங்கள் வேத புஸ்தகத்தின் வெளிச்சத்தில் அவர்களுக்குப் புது நம்பிக் கையைத் தூண்டியதால் கைகொட்டி மகிழ்ந்தனர். ஹிப்போடு ரோம் கூட்டத்தில் அவரது பிரசங்கத்தைக் கேட்டவர்களில் பல யூத ரபிகளும், போதகர்களும், வழக்கறிஞர்களும் பதிப்பாசிரி யர்களும் இருந்தனர். அவர்கள் யாரெனில் அமெரிக்க எபிரேய ரான டாக்டர் ஜேக்கப்ஸ், எபிரேய பத்திரிகை ஆசிரியர்களான W.T. சாலொமோனும், J. பிராட்ஸ்கியும், மெக்காபீனைச் சேர்ந்த லூயிஸ் லிப்ஸ்கி, வார்ஹீட்டைச் சேர்ந்த AB லாண்டோ, யூத மாதாந்தர பத்திரிகை ஆசிரியரான J. பெவ்வர், ஜீயிஸ் ஸ்பிரிட் டைச் சேர்ந்த S. டயபென்ஸ், ஜீயிஸ் பிக் ஸ்டிக்கைச் சேர்ந்த J. பரோண்டஸ், H.Yom-ஐச் சேர்ந்த Mr. கோல்ட்மேன், ருமேனிய சொசையிட்டி பிரஸிடெண்டான லியோ ஓல்ப்சன் ஆகியோராவர்.

## மதசம்பந்தமான சீயோனிய இயக்க ஆரம்பம்

ஹிப்போடுரோமில் நடந்த இந்த பெரிய கூட்டத்துக்கு பின் ரசல் போதகர் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் பல யூத கூட்டங்களில் இதே பொருள் பற்றிப் பேசினார். சீயோனிசம் என்ற அவரது புஸ்தகத்தைப் பலர் வாங்கினர். ஏராளமான பேர் ஆர்வம் கொண்டதால் Die Stimme (டை ஸ்டிமி) என்ற விசே ஷித்த செய்தித்தாளை Yiddish (இட்டிஸ்) பாஷையில் பிரசுரித் தார். அவருடைய மாதாந்தர பிரசங்கங்களும் 2000-த்துக்கு அதிகமான செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டு பல யூதர்கள் உள்பட 1, 00, 00, 000 வாசகர்களுக்கு வாராவாரம் கிடைத்து வந்தது. இவ்வாறு அவரும் அவருடன் ஒத்துழைப்பவர்களும் அதுவரை அரசியல் இயக்கமாயிருந்து வந்து சோர்வடைந் திருந்த சீயோனிஸ்ட் இயக்கத்தை உயிரடையச் செய்தனர் சில வருஷங்களில் தீர்க்கதரிசனங்களையும் ஆபிரகாமுக்கு அளிக் கப்பட்ட வாக்குத்தத்தையும் எடுத்துக் காட்டுவதின் மூலம் (ஆதி. 22 : 16-18) சீயோனிசந்தை மத சம்பந்தமாக (மதமாற்ற மடைய அல்ல) திரும்ப தூண்டி விட்டு படிப்படியாக அந்த எண்ணத்தைப் பிரகாசிக்கச் செய்தனர். தனது சோர்வினால் உலர்ந்த எலும்புகளுள்ள பள்ளத்தாக்கைப் போல் காணப்பட்ட சீயோனிசத்திற்கு, இது புதிய ஆவியையும் ஆர்வத்தையும் புதிய ஜீவனையும் பெலத்தையும் கொடுத்தது. நாம் பார்க்கிற விஷயத்தின் இந்த அம்சந்தான் எசேக்கியேலின் தரிசனத்தில் படம் போல் காட்டப்பட்டிருக்கிறது. (எசே. 37 : 1-14) அதில் ஒரு பகுதி கீழ்கண்டவாறு கூறுகிறது.

"**கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி.... அவை மிக உலந்த தாயிருந்தது.... நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கத் தரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால் உலர்ந்த எலும்புகளே கர்த்தருடைய வார்த்தை யைக் கேளுங்கள்.... நான் உங்கள் மேல் நரம்புகளைச் சேர்த்து உங்கள் மேல் மாமிசத்தை உண்டாக்கி உங்களைத் தோலினால் மூடி உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன். அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க அவர்கள் உயிரடைந்து மகா பெரிய சேனையாய் நின்றார்கள். அப்பொழுது அவர் என்னை நோக்கி .... இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே. இதோ அவர் நம்பிக்கை அற்றுப் போயிற்று .... என்கிறார்கள் ..... ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து அவர்களோடே சொல்லவேண்டியது .... என் ஜனங்களே என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன் நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன் அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். இதைச் சொன்னேன் இதைச் செய்வேன் என்று சொல் என்றார்**".

## உலகயுத்தம் – ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறியது

ரசல் போதகரும் அவருடன் ஒத்துழைப்பவர்களும் வாக்குத்தத்தங்களையும், தீர்க்கதரிசனங்களையும் அவற்றின் நிறைவேறுதல்களையும் எடுத்துக்காட்டி சீயோனிசத்தை புத்து யிரடையச் செய்தாலும் பலர் சீயோனிசம் நடைமுறைக்கு வருவதில் சந்தேகம் கொண்டனர். ஏனெனில் பலஸ்தீனா இன் னும் துருக்கியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 1879 முதல் யூதர்கள் பலஸ்தீனாவுக்குத் திரும்பிவர துருக்கி அனுமதியளித் திருந்தாலும் அவர்கள் சீயோனிச நம்பிக்கைக்கு அனுகூலமா யில்லை. அதோடு தேசம் வெறுமையாகக் கிடந்தால் எத்தனை யூதர் தங்கள் ஜீவனோபாயத்தை அங்கு தேடிக்கொள்ளக் கூடும் என்று அறிவது கடினமாயிருந்தது. இவ்வாறு சீயோனிசம் நடைமுறைக்கு வருவதைப் பற்றிய சந்தேகம் கொண்டவர்கள் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களாகிய மாம்ச இஸ்ரவே லருக்குரிய அவரது ஏற்பாட்டைப் பற்றிய அறிவில்லாமல் அவ்விதம் சந்தேகம் கொண்டனர். மேலும் பலர் புறஜாதியார் காலம் 1914-ல் முடிவதில் சந்தேகம் கொண்டனர். 1914 வந்ததும் அதை எதிர்பார்த்தனர். ரசல் போதகர் முன்னறிவித்தபடி புறஜாதியார் காலம் முடிந்து விட்டதென்றும், இஸ்ரவேலர் தாய்நாடு திரும்ப தயவு காட்டுகிறார் என்றும் காட்ட 1914-ல் உலக விஷயத்தில் ஏதாவது பெரிய மாறுதல் ஏற்பட்டதா?

ஏழுகாலங்கள் (2520 வருஷங்கள்) முடிந்துவிட்டது என்பதை நிரூபிக்கிற அத்தாட்சி முதல் உலக யுத்தமென்று வழக்கமாக அழைக்கப்படுகிற உலக யுத்தத்தின் முதல் கட்டம், திடீரென்று யுத்தம் ஆரம்பித்ததால் ஏற்பட்டது. கி.மு 607 ஐந்தாவது சந்திர மாதம் பத்தாவது நாளில் எருசலேமிலிருந்த ஆலயமும் ராஜாவின் அரமனையும் பாபிலோனியரால் இடிக்கப்பட்டது (எரே. 52 : 12, 13) இங்கு சரியாக 2520 வருஷங்களுக்குப் பின் ஐந்தாவது சந்திரமாதத்தின் பத்தாவது நாளில், (ஆகஸ்ட் 1, 1914) உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாத துமான மிகுந்த உபத்திர காலத்தின் (தானி. 12 : 1; மத். 24 : 21) ஆரம்பக் கட்டமாக உலக யுத்தம் ஆரம்பமானது. தேவ ராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு ஆயத்தமாக அது உலக ராஜ்யங்களை அழித்து கொண்டிருக்கிறது. இங்கு தீர்க்கதரி சனத்தின் குறிப்பிடத்தக்க நிறைவேறுதல் உண்மையாகவே நடைபெற்றிருக்கிறது. அதற்கு 25 வருஷங்களுக்கு முன்ன தாகவே உபத்திரவகாலம் 1914-ல் ஆரம்பமாகும் என்று ரசல் போதகர் தீர்க்கதரிசனங்களிலிருந்து திட்டவட்டமாக முன்னறி வித்திருக்கிறார்.

## பிரிட்டிஷ் பலஸ்தீனப் போர்

1917 டிசம்பரில் எருசலேம் துருக்கியரிடமிருந்து பிடிபட்டபோது யூதர்கள் மாத்திரமல்ல உலகம் முழுவதுமே நடுக்கமடைந்தது. இதில் ஏதோ அசாதாரணமானதும் குறிப்பிடத் தக்கதுமான காரியம் இருக்கிறதென்று ஒவ்வொருவரும் உணர லாயினர். ஒவ்வொரு பட்டணமும் குன்றும் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தைப் பற்றி அறிய யாவரும் ஆவலாயிருப்பதைப் போல் எருசலேமைப்பற்றியும் அறிய ஆவலாயிருக்க பலஸ்தீனப் போரில் அறிக்கைகள் தெரிவிக்கிறபடி பிரிட்டிஷ் படைகள் வேறு எந்த போர்க்களத்திலும் இல்லாத விதமாய் புதுமையான

முறையில் வெற்றியடைந்தது. உலகமெங்குமுள்ள பத்திரிக்கை வாசகர்கள் அதிக கவனமும் அவசரமும் உள்ளவர்களாயிருந் ததால் பத்திரிகை நிருபர்கள் வேதாகமத்தைப் புரட்டிப் பார்த்து தற்கால நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தும் பழைய ஏற்பாட்டு கால நிகழ்ச்சிகளைக் கண்டு இஸ்ரவேலரின் பூர்வீக சரித்திர காலத் தில் இதே யுத்தக் களத்தில் சம்பவித்த நிகழ்ச்சிகளை பத்திபத்தி யாக கேபிள் மூலம் அனுப்பி வந்தனர்.

முரடரான துருக்கியரிடமிருந்து பலஸ்தீனா பறிக்கப் பட்டதால் சீயோனிசத்தின் நம்பிக்கைகள் மிகவும் புத்துயிர் அடைந்தது. எருசலேம் பிடிக்கப்பட்டது, யூதர்களுக்கு – விசே ஷமாக தங்கள் முற்பிதாக்களின் தேசத்தில் வாஞ்சை உள்ளவர் களாய் இருந்தவர்களாய், ஜெபிக்கும் போதெல்லாம் எருசலே முக்கு நேராகத் தங்கள் முகங்களைத் திருப்பி ஜெபித்து வந்தவர்களுக்கு (1 ராஜா. 8 : 46-53; 2 நாளா. 6 : 36-39) மரித்தவர்களை கிழக்கு முகமாக அடக்கம் செய்தவர்களுக்கு, தங்களுக்குச் சொந்தமல்லாத அயல் நாட்டில் சொற்பக்காலம் தங்குகிறவர்கள் என்பதற்கும், அலைந்து திரிகிறவர்கள் என்பதற் கும், யாத்ரீகர்கள் என்பதற்கும் ஊமை அத்தாட்சியாக தாங்கள் கட்டிய வீட்டில் ஒரு பகுதியை கட்டி முடியாமல் குறையாகப் போட்டவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. உலக பெரும் பணக்காரரில் ஒருவரும் லேவா தேவிக் காரரு மான (Banker) லார்ட் ரோத்சைல்ட் என்பவரும் தாம் சிதறடிக்கப் பட்ட ஒருவர் என்றும் தனது வசிப்பிடம் தற்காலிகமான தென்றும், இஸ்ரவேலர் ஒரு காலத்தில் தங்கள் கூடாரங்களைச் சுருட்டிக் கொண்டு தங்கள் சொந்த நாட்டுக்குப் போக வேண்டிய தாகும் என்றும் தான் கொண்டுள்ள நம்பிக்கைக்கு அடையாள மாக அரண்மனை போன்ற தமது வீட்டில் ஒரு தூணை முற்றும் முடியாமல் அறைகுறையாக விட்டிருந்தார்.

## எருசலேம் எவ்வாறு விடுவிக்கப்பட்டது

1917 டிசம்பர் 9-ல் குண்டுகளைப் பிரயோகிக்காமலும் துப்பாக்கியால் சுடாமலும் பரிசுத்த கட்டடங்களில் ஒன்றையும் இடிக்காமலும் எருசலேம் விடுவிக்கப்பட்டது ஒரு அதிசயமே யன்றி வேறல்ல. இயற்கை கோட்டையாக அல்லது பலத்த அரணாக எருசலேம் வெல்ல முடியாத ஓரிடமாக இருந்தது. துருக்கிய படை எதிரிகள் அணுக முடியாமல் வெகு காலம் தடுக்கக் கூடியதாயிருந்ததால் நகரத்தில் குண்டு வீசப்பட்டு ஏழு காலங்களின் ஆரம்பத்தில் (1914-க்கு 7 x 360 அல்லது 2520 வருஷங்களுக்குமுன்) கி.மு. 607-ல் நேபுகாத்நேச்சாரால் தரை மட்டமாக்கப்பட்டதற்கும் அல்லது யூதயுக முடிவில் தீத்து ராயனாலும் ரோம படையாலும் அழிக்கப்பட்டதற்கும் மோசமாக அழிக்கப்படக் கூடியதாயிருந்தது. ஆனால் இஸ்ரவேலுக்குத் தயவு காட்டும் தேவனின் வேளை வந்துவிட்டதால் அவர் எருசலேமை அழிவினின்று விலக்கினார். நகரமானது பயங் கரமானதும் தகுந்த ஆயுதங்களையுடையதுமான துருக்கிய படைகளால் பாதுகாக்கப்பட்டாலும் ஒரு குண்டு முதலாய் சுடாமல் பிடிக்கப்பட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை முடிகிற வரையில் எருசலேம் எளிதில் பிடிபட்ட விவரம் வெளியாக வில்லை. அதைப் பற்றிச் சொல்லப்படுவதாவது, ஜெனரல் அலன்பி என்பவர் தமது படையுடன் நெருங்கி வந்தார். சேதமின்றி நகரத்தைப் பிடிப்பது எப்படியென்று யோசிக்க லானார். நகரத்தை அழிக்க அவர் விரும்பவில்லை. பரிசுத்த மதில்களுக்குள் நாசவேலை செய்வதையும் ரத்தம் சிந்துவதை யும் அவர் அருவருத்தார். ஆனால் யுத்தம் யுத்தமே. அவர் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருந்தது. இவ்வாறு அவர் சேதமின்றி நகரத்தைப் பிடிக்க திட்டம் வகுக்க முயன்று கொண்டிருந்தபோது எதிரி ஒருவன் துருக்கிய தளபதியிடம் ஓடிவந்து பலத்த ஒரு படை நெருங்கி வருகிறதென்றும் அது பலம் பொருந்திய ஜெனரல் அல்லபே என்பவரால் (Allenby) நடத்தப்பட்டு வருகிறதென்றும் சொன்னான். ஒரு பெயருக்கு பின்னால் வருகிற Bey என்ற துருக்கிய பட்டப் பெயர் ஒரு விசேஷித்த மதிப்பை அல்லது அந்தஸ்த்தைக் காட்டுகிறதாகும். இந்தச் செய்தி மூட நம்பிக்கையுள்ள துருக்கிய படைகளுக்குள் விரைவில் பரவியது. அலன்பி (Allenby) என்ற மாந்திரிகப் பெயரை அல்லாபே (Allah-Bey) என்ற பெயராக நினைத்தனர். அல்லது அந்தப் பெயர் அராபிக் பாஷையில் அல்லாவின் தீர்க்கதரிசியென்று பொருள்படும் அல்லா நபி (Allah Nabi) என்று நினைத்தனர். அவர்கள் பரிசுத்தமாக நினைக்கும் பெயரைக் கேள்விப்பட்டதும் பயந்து அல்லாவின் கோபத்துக் குள்ளாவோம் என்றெண்ணி, அல்லாவின் தீர்க்கதரிசிக்கு எதிராக யுத்தம் செய்ய மறுத்தனர். நிலமையை சரிக்கட்ட முடி யாமல் அல்லா நபி வருமுன் நகரத்தை விட்டுக் காலியாகும்படி தளபதி கட்டளையிட்டார்.

அமைதியாக கால்நடையாக பட்டணத்துக்குள் பிர வேசித்து அதைக் கைவசப்படுத்தியபின் ஜெனரல் அல்லன்பே பட்டினி கிடந்த ஜனங்களுக்கு ஆகாரம் கொடுத்து அவரவர் வேலையை அமைதியாகச் செய்யும்படி அனுமதியளித்தார். அதன்பிறகு அவர் தனது படையுடனும் யூத கொடியின் கீழ் யுத்தம் செய்த யூத படையுடனும் பலஸ்தீனாவின் மற்ற இடங்களிலுள்ள துருக்கியரை அப்புறப்படுத்தினார். ஆனால் இந்தப் பெயர் இறுதியில் அதன் மாந்திரீகத் தன்மையை இழந்தது. துருக்கியர் அந்தப் பெயரை சரியாக அறிந்து கொண்டபின் அதிக எதிர்ப்புச் செய்தனர். என்றாலும் அவர் வடக்கு நோக்கிச் சென்று இலையுதிர் காலத்தில் தமஸ்குவைப் பிடித்துக் கொண்டார். இரண்டு வாரத்துக்குள் யூத படை தமஸ்கு பக்கத்திலிருக்கும் தாவீது-சாலொமோன் கால எல்லைக்கு அப்பால் துருக்கியரை விரட்டியடித்தனர். இவ்வாறு நூற்றுக் கணக்கான வருஷங்களாக, துருக்கியரிடமிருந்த இந்த நாட்டை இஸ்ரவேலருக்கு முன்பாக விடுதலை செய்தனர். பொதுவான போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. நாலு வருஷங்களாக மூண்டு கொண்டிருந்த போர் உலகெங்கும் திடீரென்று நிறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி நான் தெரிந்து கொண்ட ஜனங்களின் சம்பந்தமாக உள்ள நோக்கம் இப்போது முடிவடைந்தது. ஆகையால் சண்டையை நிறுத்துங்கள். இஸ்ரவேலர் போய் தங்கள் சுய நாட்டைப் புதுப்பிக்கட்டும் என்று தேவன் சொன்னது போலிருந்தது.

## உலகயுத்தம் சீயோனிசத்துக்கு அனுகூலமாயிற்று

இவ்வாறு உலக யுத்தத்தின் முதல் கட்டம் (1914-1918) யூதர்கள் தங்கள் சுயநாடு திரும்புவதற்கு மிகுந்த அனுகூல மானதாயிற்று. அது பலஸ்தீனத்தை துருக்கியின் கொடுங் கோல் ஆட்சியிலிருந்து விடுவித்தது மாத்திரமல்ல சீயோனிச இயக்கத்துக்கு உதவி செய்யும்படி பிரிட்டனை வற்புறுத்துவதாக வும் இருந்தது. டாக்டர் சேய்ம் விஸ்மேனின் முயற்சியினால் 1917 நவம்பர் 2-ல் பிரிட்டன் பால்போர் அறிக்கை என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது. அது பலஸ்தீனாவில் யூதரின் தேசிய வரைப்படத்தை ஸ்தாபிக்க உறுதிமொழி அளித்தத‌ோடு இதைச் செய்து முடிப்பதில் அதிக முயற்சி செய்வதாகவும் உறுதி கூறியது. மற்ற நேசநாடுகளும் இதற்கு சம்மதித்தன. இவ்வாறு இஸ்ரவேலர் விரைவில் முன்னேற சுயநாடு திரும்ப வழி திறந்தது.

முதல் உலக யுத்தம் முடிந்தபின் 1920 ஏப்ரலில் சேன்ரிமோவில் நடந்த நேசநாடுகளின் கூட்டத்தில் பலஸ்தீனா வை நிர்வகிக்கும் அதிகாரம் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டது. இந்த நிர்வாக உரிமை 1922-ல் சர்வதேச சங்கத்தில் உறுதி செய்யப்

பட்டது. 1923 செப்டம்பர் முதல் அது அமுலுக்கு வந்தது. இதன் படி யூதர்கள் யாதொரு கட்டுப்பாடும் இல்லாமல் பலஸ்தீனாவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியல்ல, பலஸ்தீனாவிலுள்ள அரபியரின் எதிர்ப்பும் தொல்லையும் அதிகமாயிருந்ததால் அங்கு வந்து இறங்குகிறவர்களின் தொகை மட்டுப்பட்டது. அப்படியிருந்தாலும் உரிய காலத்தில் கர்த்தர் பிரிட்டனின் மேல் நெருக்கடியை வரவிட்டதால் (இரண்டாவது உலக யுத்தத்தின் மூலம்) அதிக கட்டுப்பாடில்லாமல் வந்திறங்க அனுமதியளித்தது.

## அங்கீகாரிக்கப்பட்ட ஒரு ஜாதி

பல வருஷங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கும் பிரிட்டீஷ் மேற்பார்வை முடிந்ததற்கும் பின் 1948 மே மாதத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிதமாயிற்று. டாக்டர் சேய்ம் விஸ்மேன் (Dr.Chaim Weizmann) முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது முதல் பல்லாயிரக்கணக்கான யூதர் விமானத்திலும் கப்பல்களிலும் பலஸ்தீனாவுக்குத் திரும்பி வந்தனர். 1950-ல் இஸ்ரவேல் பார்லிமெண்டு வெளியிட்ட திரும்பவருவதற்குரிய சட்டத்தின்படி (the Law of the return) திரும்பி வர விருப்பமுள்ள யாவரும் வரும்படி இஸ்ரவேலின் வாசல் திறக்கப்பட்டது. 64 நாடுகளிலிருந்து யூதர் திரும்பி வந்திருக்கிறார்களென்றும் இப்போது பலஸ்தீனாவில் 17, 00, 000 யூதர்கள் இருக்கிறார்களென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1948-49-ல் அரபியரோடு நடந்த யுத்தத்தில் யூதர் வெற்றி பெற்றனர். பரிசுத்த நாட்டிலிருந்து அரபியரை வெளியேற்ற தேவன் இஸ்ரவேலருக்குத் தொடர்ந்து உதவி செய்வார். தீர்க்கதரிசனங்கள் உறுதியாகக் கூறுகிறபடி தேவன் நாடு முழுவதும் இஸ்ரவேலருக்குச் சொந்தமாகவும் நாட்டின் எல்லைகள் தாவீது சாலொமோன் காலத்தில் இருந்த அளவு விரியவும் உதவி செய்வார். (ஆதி. 48 : 4; 17 : 8).

## பாழாய்க் கிடந்த நாடு திரும்பக் குடியேற்றப்பட்டது

உலக யுத்தத்தின் முதல் கட்டம் (1914-1918) பொருளாதார விஷயத்தில் மோசமான நிலமையில் இருக்கச் செய்தது. துருக்கியப் படைகள் நாட்டைக் கொள்ளையடித்துப் பாழாக்கியது. முந்தின நூற்றாண்டுகளில் துருக்கியரும் அரபியரும் ஈவிரக்கமின்றி காடுகளை அழித்து நாட்டின் வளத்தைப் பாழாக்கி நில அரிப்பைத் தடுக்க யாதொன்றும் செய்யாமல் விட்டனர். 1918-ல் நாட்டில் பாதி பாழ் நிலமாகப் பாவிக்கப்பட்டது. ஆனால் காரியாதிகள் முடிவான நல்ல நிலமைக்கு வரவேண்டியதாயிற்று. அவர்களை சிறையிருப்பிலிருந்து திரும்பி வரவும் அங்கு சுகமாக தங்கியிருக்கவும் செய்வேன் என்று தேவன் வாக்களித்திருக்கிறார் (எரே. 32 : 37, 41-44) மேலும் ஆமோ. 9 : 14, 15-ல் ''**என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்: நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்களை இனிப் பிடுங்கப்படுவதில்லை**'' என்றும் வாக்களித்திருக்கிறார் (யாக்கோபின் சந்ததிக்கு நித்திய சுதந்தரமாக அளிக்கப்பட்ட நாடு ஆதி. 48 : 4; 17 : 8).

*சிறைப்பட்ட ஜனங்கள், எங்கும் சிதறடிக்கப்பட்டவர்கள்*
*ஜாதிகளின் மத்தியில் இங்கும் அங்கும் துரத்தப்பட்டவர்கள்*
*என்றாலும் யெகோவாவின் தயவிலிருந்து அகலாதவர்கள்;*
*அவர்கள் துன்பத்தில் அவரால் மறக்கப்படாதவர்கள்.*
*அந்த ஜனம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல்,*
*அவர்கள் தூரத்திலும் சமீபத்திலுமிருந்து சுயதேசத்தில்*
*கூடுகிறார்கள்,*
*சமாதானத்துடனும் செல்வத்துடனும் அவர்கள் என்றென்றும்*
*அதிலே வாசஞ்செய்வார்கள்; இனி எக்காலமும்*
*அவர்கள் அலைந்துதிரிவதில்லை.*

வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் எங்கெங்கு குடியேறுகிறார்களோ அங்கெல்லாம் தேவ ஆசீர்வாதத்தால் விஞ்ஞான விவசாயத்தின் மூலமும், செயற்கைமுறை பழ உற்பத்தி மூலமும் நாட்டை பழைய செழிப்புக்குக் கொண்டு வருகிறார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாக காய்ந்து கிடந்த சாலொமோனின் குளங்கள் 1927-ல் பொங்கி வடிய ஆரம்பித்தன. அந்தக் குளங்களில் 60,00,000 கேலன் தண்ணீர் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்நேரத்தில் இந்த அற்புத செயலுக்காக நன்றி கூறும்படி ஒருநாள் பொது ஜன விடுமுறையளிக்கும்படி பலஸ்தீன ஹை கமிஷனர் கேட்டுக் கொள்ளப்பட்டார். பல நூற்றாண்டுகளாக முன் மாரி அற்ப சொற்பமாகவும், பின்மாரி அறவே இல்லாமலும் இருந்தது. ஆனால் அறிக்கை கூறுகிறபடி நாட்டை மகிழச் செய்ய அவை திரும்பி வந்தன. அதன் பலனாக பலஸ்தீனாவில் சில பகுதிகள் இரண்டு மூன்று போகம் பயிர் செய்யப்படுகிறது. நீர்ப்பாசான, வடிகால் வசதிகள் மூலம் சதுப்பும், வறண்டதும் மலேரியா பரவியிருந்ததுமான லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் வளம் பொருந்திய நாடாக மாற்றப்பட்டிருக்கிறது. உதாரணமாக விஸ்தாரமானதும் சதுப்பு நிலமானதும் மலேரியா நிறைந்ததுமான எஸ்ரலோன் பள்ளத்தாக்கு ஏதேன் தோட்டத்தைப் போல் மாற்றப்பட்டிருக்கிறது. பலஸ்தீனாவிலுள்ள பழங்கள் உதாரணமாக ஆரஞ்சுப் பழங்கள் உலகத்தின் எந்த நாட்டிலுள்ள பழங்களையும் விட சிறப்பானது என்று எண்ணப்படுகிறது. கடந்த வருடத்தில் இஸ்ரவேல் நாட்டில் சுமார் 18,000 டன் ஒலிவக் கொட்டைகள் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இது சமீபகாலத்திலுள்ள மிகுந்த விளைச்சலாகும். இப்போது 1000 ஒலிவ எண்ணெய் ஆலைகள் வேலை செய்து ஏராளமான எண்ணெய் உற்பத்தி செய்கிறது. ''**இஸ்ரவேலே தேவன் உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார். களங்கள் தானியத்தால் நிரம்பும் ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்**''. (யோவே. 2 : 23, 24)

பலஸ்தீனாவுக்கு வெளியில் விசேஷமாக அமெரிக்காவிலுள்ள யூத ஸ்தாபனங்கள் தங்கள் சுய நாட்டில் இஸ்ரவேலரைத் திரும்பக் குடியேற்றுவதற்கு அதிக உதவி செய்திருக்கின்றன. அமெரிக்காவில் மாத்திரம் கடந்த பத்து வருஷங்களில் இஸ்ரவேலில் நடைபெறும் அன்பளிப்பு வேலைக்காக ஒரு கோடி டாலருக்கு மேல் சேகரிக்கப்பட்டிருக்கிறது. பிரமாண்டமான முறையில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. எரே. 31: 38-40-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி விரிவடைந்து வருகிறது. 1910-ல் (Tel-Aviv) டெல் அவிவ்-வில் சில கூடாரங்கள் மாத்திரம் இருந்தன. இப்போது அது ஒரு துறைமுகமாக 4,00,000 ஜனத்தொகையுள்ளதாய் இருக்கிறது. ஹாய்பா ஒரு சிறு கிராமமாக இருந்தது. இப்போது அது மத்தியதரைக் கடற்கரையிலுள்ள அழகிய துறைமுகமாயிருக்கிறது. உண்மையாகவே ''**அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டணங்களை புதிதாய்க் கட்டுவார்கள்**''. (ஏசா. 61 : 4)

யூதர் விரைவில் பட்டணங்களைக் கட்டி நாட்டை மிக செல்வம் மிகுந்ததாக்குவார்கள். உலகமெங்குமுள்ள அமைதியின்மை புறஜாதி நாடுகள் மேல் கொண்டுவரும் மகா உபத்திரவத்தின் கட்டங்களில் சிக்கித் தவிக்கும் போது, கோடிக்கணக்கான பணத்தை பலஸ்தீனாவுக்கு அனுப்பி அங்கு பத்திரமாயிருக்கும்படி அங்கு சேமித்து வைக்க ஐசுவரியவான்களான பல

இஸ்ரவேலரைத் தூண்டும். புரட்சியும் அரசின்மையும் நடை பெற்று புறஜாதியாரில் அநேகர் கொல்லப்பட்ட பின் (எரே. 25 : 33) யூதர் சமாதானமாகவும் பத்திரமாகவும் வாழும்போது ஐரோப்பிய, ஆசியா, ஆப்பிரிக்க நாட்டிலுள்ள மீதியானவர்கள் இஸ்ரவேலர் செழிப்புடனிருப்பதைப் பார்த்து அவர்களைக் கொள்ளையடிக்கும்படி தூண்டப்படுவார்கள். அதன்மூலம் அவர்கள் யாக்கோபின் உபத்திரவத்தின் இரண்டாவது கட்டத்தை (எரே. 30 : 4-8) இஸ்ரவேலரின் கடைசி உபத்திரவத்தைக் கொண்டு வருவார்கள். ஆனால் அவர்களின் மேசியா ஆச்சரி யமான விடுதலையளிப்பதினால் (எசே. 38 : 18-39; 29) அவர்கள் ஒருமனப்பட்டு கர்த்தரிடம் திரும்புவார்கள். (சகரி. 12 : 9, 10) அதன் பிறகு பரிசுத்த நாடு வாதத்துக்கு இடமில்லாமல் அவர்களுடையதாகும். இவ்வாறு தங்கள் சுய நாட்டில் ஒரு ஜாதியாக உலகின் மனுக்குலத்துக்கு ஆதாரமாக, முதலாவதாக அவர்கள் மத்தியில் ஸ்தாபிக்கபட இருக்கும், ஆயிர வருஷ ராஜ்யத்தின் பூமிக்குரிய அம்சத்தைப் பெற தகுதியுள்ளவர்களாக்கப்பட்டு காத்துக் கொண்டிருக்கின்றனர்.

## வரப்போகும் ராஜ்யத்தின் தலைநகர்

சில புறஜாதி அரசாங்கங்களின் பலத்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் இஸ்ரவேலின் தலைநகர் அயல்நாட்டு மந்திரிகள் காரியாலயங்கள் உட்பட டெல் அவிவில் இருந்து மாற்றப்பட்டு எருசலேமில் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருப்பது கவர்ச்சிகரமான ஒரு காரியமாகும். அது இருக்கவேண்டிய பிரகாரம் இருக்கிறது. ஏனெனில் சமாதானமான ஆட்சியுடன் சீக்கிரத்தில் ஸ்தாபிதமாகும் புதிய சகாப்தத்தில் ''சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்துதான் கர்த்தருடைய வசனமும் வெளிப்பட வேண்டும்.'' (ஏசா. 2 : 3) எருசலேமை சர்வதேச அதிகாரத்தின் கீழ் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஐக்கிய நாட்டு திட்டத்தின்படி இஸ்ரவேலின் தலைநகர் டெல்அவிவில் இருக்க வேண்டுமென்று அது உத்தரவிட்டபடி டெல்அவிவில் இருந்து அல்ல.

உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப் படுவதாக என்று, இன்னமும் கிறிஸ்தவர்கள் வரவேண்டும் என்று ஜெபிக்கிற, ராஜ்யத்தின் தலைநகராக எருசலேம் இருக்கும். ''**புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒருபங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்**'', இந்த பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (குருட்டாட்டத்திலிருந்து மீட்கப்படுவார்கள்- சகரியா 12 : 10) ''**மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து**'' (மேசியாவும் அவ ருடைய உடன் சுதந்தரரும் வெளி. 14 : 1; ஒபதியா 21) ''**அவபக்தியை யாக்கோபை விட்டு** (மாம்ச இஸ்ரவேலரிலிருந்து) **விலக்குவார்**'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் கூறுகிறார். (ரோம. 11 : 25, 26) மனு மக்களில் மீதியானவர்கள் கர்த்தரைத் தேடும்படி இப்போது மேசியா விழுந்து போன தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்துக் கட்டிக் கொண்டிருக் கிறார். (ஆமோ. 9 : 11, 12; அப். 15 : 15-17) ஏனெனில் ஆபிரகாமின் சந்ததி பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க வேண்டியதிருக்கிறது. (ஆதி. 22 : 18; சகரி. 8 : 13-23; 14 : 16, 17; ஏசா. 2 : 2-4).

''**சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப்பாடு, இஸ்ரவேலரே ஆர்ப்பரியுங்கள். எருசலேம் குமாரத்தியே நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூறு. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனி தீங்கைக் காணாதிருப்பாய். அந்நாளிலே எருசலேமைப் பார்த்து பயப்படாதே என்றும் சீயோனைப் பார், உன் கைகளைத் தளர விடாதே என்றும் சொல்லப்படும். உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார்: அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்: அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூறுவார். உன் சபையின் மனுஷராயிருந்து பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்வேன். இதோ அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்: நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன். அவர்கள் வெட்கம் அனுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன். அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன். உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**'' (செப். 3 : 14-20). ''**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப் படத்தக்கவர். ஜனங்களெல்லாரும் ஆமென் அல்லேலூயா என்பார்களாக.**'' (சங். 106 : 48).

***

Visit us at : **www.biblestandardindia.com**

## அறிவிப்பு

**கர்த்தருக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஒரு ஆண்டு காலம் இந்தியாவில் நடைபெற்ற ஊழியங்கள், சத்திய வேலைகள் ஆகியவைகளை கவனித்த பிற்பாடு, இந்த ஆண்டு 2011, மே மாதம் 26–ஆம் தேதி சகோ. வி. வின்சென்ட் ஜெயக்குமார் அவர்களை Laymen's Home Missionary Movement–ன் நிரந்தர இந்திய பிரதிநிதியாக வேதாகம வீட்டிலிருந்து போதகர் ரால்ஃப் ஹெர்சிக் அவர்கள் நியமித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். சகோதர சகோதரிகள் யாவரும் காரியங்களை ஜெபத்தில் வைக்கும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

Laymen's Home Missionary Movement
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY